செந்தமிழ்

தொகுதி	திருவள்ளுவர் ஆண்டு உயயம. பங்.	பகுதி
சூச	மார்ச்—1969	ந

உலகத் தமிழ்

—*—

திரு. ஆ. மி. டயசு, I. P. S., திருச்சி.

முன்னுரை

1. 'உலகத்தமிழ்' என்ற சொற்றொடர் சமீப காலத்தில் தமிழ் மக்களிடையே பரவலாக வழங்கப்பட்டு வருவதை நாம் அறிவோம். இந்த ஆண்டின் தொடக்கத்திலே சென்னையில் நடந்த உலகத் தமிழ் மாநாட்டின் போது எல்லோர் வாயிலும் இச்சொற்றொடர் பெருமிதத்துடன் வழங்கி வந்தது. ஆனால் உலகத் தமிழ் என்ற சொற்றொடரின் அடிப்படைக் கருத்து என்ன என்று நம்மில் அநேகர் சிந்தித்து இருக்கமாட்டோம், 'யாதும் ஊரே, யாவரும் கேளிர்' என்று தமிழர் இனத்தின்

பரந்த மனப்பான்மையையும் உயர்ந்த பண்பாட்டையும் எடுத்தியம்பிய புறநானூற்றுப் புலவன் பூங்குன்றனாரின் வாக்கு, சென்னை மாநாட்டிற்குப் பொருத்தமான மேற்கோளாக அமைந்திருந்தது. மாநாட்டின் அரங்குகளில் எல்லாம் பல்வேறு கோணங்களில் அழகுறப் பொறிக்கப்பட்டிருந்த இந்தக் கொள்கைக் கூற்றினை மேலளவில் ஏற்றுக்கொண்ட பலருங்கூட இதன் உட்கருத்து என்ன என்று எண்ணிப் பார்த்ததாகத் தெரியவில்லை உண்மையில் பூங்குன்றனாரின் வாக்கு, அவர் காலத்தில் அன்னார் கருதியதைவிட ஆழமான பொருளுடையதாகும். இந்தப் பரந்த கருத்தின் பின்னணியிலேதான் 'உலகத்தமிழ்' என்ற சொற்றொடரை நாம் ஆராயவேண்டும்.

உலகம்

2. உலகத் தமிழ் என்ற தொடரில் முதற்சொல் உலகம். இரண்டாம் சொல் தமிழ். கடவுளின் படைப்பிலே பல ஆயிரக்கணக்கான சிறிய நட்சத்திரங்களுக்கு இடையே, சூரிய குடும்பத்தைச் சார்ந்து அதைச் சுற்றிவரும் ஒரு கோளம் பூமி. ஏறக்குறைய 25,000 மைல் சுற்றளவுடன் சோதிப் பிழம்பான சூரியனிலிருந்து பிரிந்து வந்து குளிர்ந்து மீண்ட இக்கோளம் தான் நமது உலகம். இவ்வுலகத்தில் முதலில் தோன்றிய மரம், செடி, கொடி வகைகளும், உயிர்க் கணங்களும், நாளடைவில் இயற்கையின் வளர்ச்சியாலும், கடவுளின் அருளாலும், மனிதனால் இன்னும் அறுதியிடமுடியாத அளவு சிறப்புடன் அமைந்தது என்று சொன்னால் அது மிகையாகாது. இத்தகைய சூழ்நிலையிலே மனிதனும் தோன்றினான். சிறப்புமிக்க இந்த உலகத்தின் முதுகுடிகள் யார் என்பது இன்னும் முடிவுகட்டப்படாத ஒரு பிரச்சினை. உணவு வசதிகள் ஓரளவு அமைந்த பீடபூமிகளில் தோன்றி, பின்னர் ஆற்றுப் படுகையிலே குடியேறி வளர்ந்த மனித சமுதாயங்கள், படிப் படியாகப் பண்பாட்டில் உயர்ந்து தங்களுக்கு வேண்டிய உணவு, உடை, உறைவிடம் முதலியவற்றிற்கும் தகுந்த வழிவகைகள் அமைத்துக்கொண்டு வாழ்ந்தார்கள் என்பது வரலாற்று ஆசிரியர்கள் கருத்து. கல் ஆயுதங்கள் இரும்பாக மாறவும் சொல்லோவியங்கள், வரிவடிவமாக மாறவும்

பல்லாயிரக் கணக்கான ஆண்டுகள் ஆகியிருக்க வேண்டும் என்பதும் அவர்களுடைய கருத்து.

தென்னிந்தியா

3. உலகத்தில் மக்கள் இனம், முதல் முதலாகத்தோன்றி வசித்த பகுதிகளில் தென்னிந்தியா ஒன்று என்பது வரலாற்று முறையிலும், விஞ்ஞான வகையிலும் கண்டறிந்த உண்மை. இப்புராதன நிலப்பரப்பிலே தமிழகத்தில் செங்கல்பட்டு மாவட்டத்தைச் சேர்ந்த வடமதுரையிலும் அதிராம்பாக்கத்திலும் கற்கால மனிதர்கள் இருந்ததாக வரலாற்று ஆராய்ச்சியாளர் சங்காலியா என்பவர் கூறுகிறார் அதன்பின் திருநெல்வேலி தேரிகளிலும், கடைசியாக வரலாற்றுக் காலத்திற்குச் சிறிது முன்பு வட ஆற்காடு மாவட்டத்தில் பையம்பள்ளியிலும், செங்கற்பட்டு மாவட்டத்தில் சானூரிலும், திருநெல்வேலி ஆதிச்சநல்லூரிலும் அக்காலத்து மனிதர்கள் சேர்ந்து வாழத் தொடங்கி இருக்க வேண்டும். விவசாயமும், நீர்ப்பாசனமும், உலோகப் பொருள்களும், கலைப்பொருள்களும், வணிகமும், பண்பாடும், வீடுகள், நாடுகள், நகரங்கள் ஆகியவற்றின் அமைப்பும், ஏன் மொழித்தன்மையும்கூட அக்கால மக்களுக்கு நன்கு தெரிந்து இருந்தன என்று அவர் முடிவு செய்து இருக்கிறார்.

மொழி

4. மொழி என்பது ஒரு சமுதாயத்தில் உள்ள மக்கள் தங்களுடைய எண்ணங்களைப் பரிமாறிக் கொள்ளத் தங்கள் பண்பாட்டின் அடிப்படையில் அமைத்துக்கொண்ட ஒரு வாகனம். அது மனிதனுக்கு இயற்கையிலே தானாக வரும் நடத்தல், சாப்பிடுதல் போன்ற அலுவல் முறை அன்று! அதற்கு மாறாக, மொழிபேசும் வன்மை, தேடிப்பயின்று பெறுகின்ற ஒரு பண்பாட்டு முறை என்று சொல்லவேண்டும். ஆ, ஊ, என்னும் ஆச்சரியக் குறிகளும், கடகட மடமட என்று உச்சரிக்கும் இயற்கை வர்ணிப்புத் தொடர்களும் மொழியின் அடிப்படையாக ஆகமாட்டா! கருத்துக்களைப்

படம் பிடித்துக் காட்டும் அடிப்படைச் சொற்களே. மொழியின் மூலங்களாகக் கருதப்பட வேண்டும். கருத்துக்களைத் தனித் தனியே படங்களாக எடுத்துக்காட்டும் மொழிகள்தாம், உலகத்தில் முதலாவது ஏற்பட்ட மொழிகள் என்றும், அதற்குப் பிறகு ஒரு சில வடிவங்களைக்கொண்டு தொடர்புள்ள கருத்துச் சேர்க்கைகளை ஒரு முறையாகக்கூறும் வகையில் ஏற்பட்ட மொழிகள் பண்பட்ட மொழிகள் என்றும், பின்னர் எண்ணங்களை நல்ல முறையில் விளக்குவதற்கு ஒலி அமைப்புக்களையும் சொல் அமைப்புக்களையும் இலக்கண அமைப்புக்களையும் அடுக்கடுக்காகச் சேர்த்து வகைப்படுத்திச் சொல்லுவது, பல நல்ல சீருள்ள மொழிகளின் அம்சங்களாக அமைந்தது என்றும், இன்னும் பிற்காலத்தில் ஏற்பட்டது வேர்ச்சொற்களையும் மாற்றிக் கருத்துக்களை வெளிப்படுத்தும் மொழி முறைகள் என்றும், பன்மொழிப் புலமை வாய்ந்த அறிஞர்கள் கருதுகின்றனர். இலத்தீனும் சம்சுகிருதமும் நான்காவது வகுப்பைச் சார்ந்தன என்றும், தமிழ் மொழி மூன்ருவது வகுப்பைச் சார்ந்தது என்றும் அவர்கள் கூறுவர். இத்தகைய பாகுபாடு உள்ள மொழிகளில், எது உயர்ந்தது எது தாழ்ந்தது என்ற பிரச்சினைக்கு இடமே இல்லை. ஒவ்வொரு நிலப் பரப்பிலும் ஆங்காங்கு உள்ள சமுதாயத்தின் தேவைக்கும், பண்பாட்டிற்கும், எண்ண எழுச்சிகளுக்கும், இலக்கிய மரபுகளுக்கும் ஏற்ப மொழி அமைப்புகள் தோன்றி வளர்ந்து மாறி மலர்ந்து சிறப்புறுகின்றன. உயர்ந்த கருத்துக்களைப் பண்பட்ட முறையில், பொருள் வேறுபாடு இன்றி எழிலுடன் எடுத்துச் சொல்லக்கூடிய சிறப்பே ஒரு மொழியின் உண்மையான சிறப்பு.

தமிழ் உலகம்

5. அடுத்தபடியாகத் தமிழ் உலகம் எனச் சொல்லப் படும் பகுதி யாது என்று ஆராய்ந்து அதற்குப் பிறகு, தமிழ் மொழி பற்றி அறியப்புகுவது நல்லது. தொல்காப்பியத்திற்குச் சிறப்புப் பாயிரம் தந்த பனம்பாரனர் 'வட வேங்கடம் தென்குமரி ஆயிடைத் தமிழ் கூறும் நல்லுலகு' என்று தமிழக எல்லைகளைத் தெளிவாகக் குறிப்பிட்டு இருக்கிருர். இவற்றை

'நெடியோன் குன்றமும் தொடியோள் பௌவமும்' என்றும், சங்க இலக்கியங்கள் வருணிக்கின்றன தமிழகத்தின் வட எல்லை வேங்கடம் என்னும் திருப்பதி மலை என்பதில் ஐயப் பாடு யாதும் இல்லை. அவ்வாறே கிழக்கேயும் மேற்கேயும் கடல்கள் எல்லைகளாக அமைந்து இருக்கின்றன. ஆனால், தென் எல்லையாகிய குமரி எது என்பதுபற்றிப் பல சர்ச்சைகள் இருந்து வந்து இருக்கின்றன. குமரி என்பது இன்றைய குமரி முனையும் கடலும் அல்ல குமரி ஆறு என்ற ஒன்று முன்பு இருந்தது; அதை ஒட்டி ஒரு பரந்த நிலப்பரப்பும் இருந்தது என்பது பல ஆசிரியர்களுடைய கருத்து. 1964-ம் ஆண்டின் இறுதியிலே தனுஷ்கோடியில் ஏற்பட்ட கடல் கோளினால் பெருத்த சேதம் ஏற்பட்டது தமிழ் மக்கள் எல்லோருக்கும் நினைவு இருக்கும். அதை அடுத்த சில தினங் களில் கடற்கோளினால் ஏற்பட்ட சேதங்களை நேரில் காணும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. கருங்கல்லும், சிமெண்டும், இரும்பும் சேர்த்துக் கெட்டியாக அமைக்கப்பட்டிருந்த பாம்பன் பாலம், விழுந்து, நெளிந்து, ஒடிந்து மடிந்து கிடந்த நிலையைப் பார்த்த எனக்குக் கடற் கோள்கள் இன்னும் அதிகமாக உயர்ந்த வலிமையுடைய பேரலைகளை எழுப்பியிருந் தால் ஏன் தென் மதுரையையும் கவாடபுரத்தையும் விழுங்கி இருக்கக்கூடாது என்று கேட்கத் தோன்றியது ஆகவே ஒரு காலத்தில் தமிழகம் தெற்கே பல காவதங்கள் தூரம் பரந்த நிலப்பரப்பாக இருந்தது என்று ஆசிரியர்கள் சொன்னால் அதைப்பற்றி நாம் ஆச்சரியப்படுவதற்கில்லை இப்பண்டைய தமிழகத்தின் மக்கள் திராவிடர் அல்லது தமிழர் என்று அழைக்கப்பட்டனர் திராவிடம் திரவிடமாகிப் பின் திரமிடம் திரமிளம் என்று திரிந்து அதற்குப் பின் அது தமிழகம் ஆகி அதுவே தமிழ் என்று மாறியது என்பது பன்மொழி அறிஞர் கால்டுவெல் அவர்களின் ஆராய்ச்சி முடிபு. திராவிட மொழி களில், அடிப்படை மொழிக்குத் திராவிடம் அல்லது தமிழ் என்று பெயர் வந்ததில் வியப்பு ஒன்றும் இல்லை இந்தத் திராவிடர்கள் முதலிலே எங்கிருந்து வந்தார்கள் என்பதுபற்றி இன்னும் கருத்து வேறுபாடு இருந்து வருகிறது. பலர், திராவிடர்களின் முன்னோடிகள் மேற்கு ஆசியாப் பகுதி களிலிருந்து வந்தனர் என்று சொல்லுவர். இந்தியாவின்

வடமேற்கே க்வெட்டா பக்கத்தில் பிராகுனி என்று சொல்லப்படும் ஒரு திராவிடமொழி பேசப்படுவதை அவர்கள் இதற்குச் சான்ருக எடுத்துச் சொல்லுவார்கள். சிலர் தெற்கே லெமூரியா கண்டத்திலிருந்து திராவிடர்கள் வந்து, தென் இந்தியப் பீடபூமியில் குடியேறிப் பிறகு மேற்கே சென்றதாகச் சொல்லுவார்கள். அவர்கள், தென் இந்தியாவுக்கும் தென் கடலிலுள்ள பல நிலப்பரப்புக்கும் இடையே உள்ள தாவர-உயிர் இனங்களின் தொடர்பை இதற்குச் சான்ருகக் காட்டுவார்கள். எந்தக் கருத்துச்சரி என்று முடிவாகச் சொல்லுவதற்கு இல்லை. மோகஞ்சதாரோ புதைபொருள் ஆராய்ச்சியின் பயனுகக் கிடைத்த எழுத்துப்பட்டயங்களை ஆராய்ந்து முடிவு கட்டியபின்தான் இந்தப் பிரச்சினைக்கு ஒரு தீர்வு காண இயலும். அது எப்படி ஆயினும், மகாபாரத காலத்திலும் அதன்பின் கிறித்துவுக்கு முந்திய மூன்ரும் நூற்ருண்டிலும் அசோகச் சக்கரவர்த்தியின் கல் வெட்டுகளில், சேர சோழ பாண்டிய மன்னர்களின் நாடுகள் தமிழ்நாடு என்றுதெளிவாகக் குறிப்பிடப்பட்டு இருக்கின்றன ஆகவே அந்தக் காலத்திற்கு ஒரு சில நூற்ருண்டுகளுக்கு முன்னுவது, தமிழ் உலகம் உருவெடுத்து இருக்கவேண்டும் என்பதில் ஐயம் இல்லை.

தமிழ்

6. ஏறக்குறைய இதே காலத்தில் தமிழ்மொழி முதல் முதலாக வரிவடிவம் பெற்றது என்று சொல்லப்படுகிறது. உலக மொழிகள் பலவும் எழுத்துப்பெற்ற காலமும் இதுவே அன்று தோன்றி. தமிழ் எழுத்து வடமொழி எழுத்துக்களின் கலப்பற்ற தனித்தமிழ் எழுத்தாக இருந்திருக்க வேண்டும் என்பது அறிஞர்களின் கருத்து, ஆனுல் அக்காலத்து கல்வெட்டுக்களோ, வேறு ஏடுகளோ ஒன்றும் இதுவரை கிடைக்கவில்லை. இரண்டாம் நூற்ருண்டு முதல் ஒன்பதாம் நூற்ருண்டு வரையில் உள்ள கல்வெட்டுக்களில் பிராமி தொடர்புள்ள தமிழ் எழுத்துக்கள் இருக்கும் காரணத்தால் தமிழின் முதல் வரி வடிவு அதுதான் என்று சொல்வதற்கில்லை. பிந்திய கல்வெட்டுக்கள் பலவற்றில் 'வட்டெழுத்துக்கள்' என்று சொல்

லப்படும், கல்லில் வெட்டிய 'வெட்டெழுத்துக்கள்' காணக் கிடக்கின்றன. இவை திடீரெனத் தோன்றியிருக்க முடியா. வட இந்தியாவிலிருந்து பிராமி எழுத்து, புத்த சைன மத போதகர்களோடு வந்த காலத்திற்கு முன்பே தமிழ் நாட்டில் இந்தத் தனித் தமிழ் எழுத்து இருத்திருக்க வேண்டும் என்று கொள்ளக்கூடும். ஏறக்குறைய இதே காலத்தில் எழுதப் பட்டது, தமிழ் மொழியின் முதல் இலக்கணமான தொல்காப் பியம் இலக்கியத்தின் பின் இலக்கணம் தோன்றுவது மொழி மரபு அம்முறையில் தொல்காப்பிய காலத்திற்கு முன்னரே, தமிழ் இலக்கியங்கள் பல வரி வடிவில் பரவலாக இருந்திருக்க வேண்டும் என்று ஊகிக்க இடமுண்டு.

தமிழ்ச் சங்கங்கள்

7. இறையனர் அகப்பொருளில் சொல்லப்படும் முதற் சங்கம், இடைச்சங்கம் இவற்றின் குறிப்புக்கள் மிகைப்படுத்திச் சொல்லப்பட்டவையாக இருக்கலாம். ஆனல் கடைச்சங்கத்தின் முன்பாக இரண்டு சங்கங்கள் இருந்திருக்கலாம் என்பதை எல்லோரும் ஏற்றுக்கொள்ள முடியும். அது எவ்வாறு இருப் பினும், மூன்ரும் தமிழ்ச் சங்கம், தி..மாக இன்றைய மதுரையில் கிறித்துவுக்கு முன் 300 ஆண்டிலிருந்து கிறித்துவுக்குப் பின் 200 ஆண்டுகள் வரை இருந்திருக்க வேண்டும் என்று தெரிகிறது. எட்டுத்தொகை. பத்துப்பாட்டு, பதினெண்கீழ்க்கணக்கு, ஐம்பெரும் காப்பியம் இவைகள் யாவும் இக்கடைச்சங்க காலத்து நூல்கள். பல புலவர்களால் எழுதப்பட்ட புறநானூரும், நக்கீரரின் திருமுருகாற்றுப் படையும், திருவள்ளுவரின் திருக் குறளும், இளங்கோவடிகளின் சிலப்பதிகாரமும் இந்நூல்களில் தலைசிறந்தவை. இந்நூல்களில்இருந்து அக்காலத்துத் தமிழரின் வாழ்க்கை முறையையும் பண்பாடுகளையும் பற்றித் தெளிவாகத் தெரிந்துகொள்ள முடிகின்றது அக்கால மன்னர்கள் சீரும் சிறப்புடனும், செங்கோலோச்சி அதன் பயனுக மதுரை, காவிரிப்பூம் பட்டினத்து மக்கள் இலக்கியச் சிறப்பும், வணிகப் பெருமையும் எய்தி, உயர்ந்த வாழ்க்கைத்தரம் உள்ளவர்களாக வாழ்ந்து, கண்ணியமான வெளிநாட்டுத் தொடர்பும் கொண்டு

இருந்தார்கள்என்று தெரியவருகின்றது. இதற்கு மெகாஸ்தனீஸ், பிலினி, டாலிமி, பெரிப்லஸ் முதலிய மேனாட்டு வரலாற்று ஆசிரியர்களின் நூல்களிலிருந்தும் சான்றுகள் கிடைக்கின்றன. இலங்கை வரலாற்று நூலான மகாவம்சத்தில் இருந்தும் இவை தெளிவுபடும். ஆகவே இன்றைக்கு ஏறக்குறைய இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன், தமிழ்மொழி உச்சநிலையில் சிறந்த இலக்கியமும் இலக்கணமும், வாழ்க்கை முறையும் பண்பாடும் சேர்ந்து நிற்க, பெருமைபெற்று விளங்கியது என்று திட்டவட்டமாகச் சொல்லலாம்.

தமிழகத்தின் இடைக்காலமும் கடைக்காலமும்

8. இத்தகைய தமிழ்மொழி இரண்டாம் நூற்றாண்டிலிருந்து ஆறும் நூற்றாண்டுவரை களப்பிரர் படையெடுப்பினுல் ஓரளவு குறைபாடு எய்தி, சிறப்புக்குன்றி இருந்தது. பிறகு நாயன்மார், ஆழ்வார் பக்தி வழிபாட்டுப் பாடல்களின் வழியாகப் புத்துயிர் பெற்றது. அதற்கும் பிறகு, பாண்டியனும் பல்லவனும் சோழனும் தலைசிறந்து விளங்கிய காலத்தில், தமிழ்மொழி மீண்டும் இலக்கியச் சிறப்பும் பெருமையும் பெற்று உயர்ந்ததை நாம் எல்லோரும் அறிவோம். இக்காலத்து நூல்களில் மிகச் சிறந்தது கம்ப இராமாயணம் ஆகும் பிறகு திரும்பவும் தமிழ் ஓரளவு நிலை குன்றியது. இறுதியாக மீண்டும் மொழிச் சிறப்புஏற்பட்டது. 19-ஆம், 20-ஆம் நூற்றாண்டுகளில்தான்என்று முடிவுகட்ட வேண்டியிருக்கிறது வித்துவான் மீனாட்சி சுந்தரம்பிள்ளையவர்களும், டாக்டர் உ. வே சுவாமிநாதய்யர் அவர்களும், அவர்களுடைய மாணவர்களும், சகாக்களும், விடுதலைப் புலவன் பாரதியும், மற்றவர்களும் தமிழுக்காகச் செய்த பெரும் தொண்டைத் தமிழ்உலகம் என்றும் மறக்காது. தமிழ் மொழி, தமிழர் சமுதாயத்தின் தேவைக்கும் பண்பாட்டிற்கும் எண்ண எழுச்சிகளுக்கும் இலக்கிய மரபுகளுக்கும் ஏற்ப, ஏறக்குறைய இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னே உச்சநிலையை அடைந்து இருந்தது என்று சொன்னேன். தமிழரைப் போன்று உலகத்தின் மற்ற பல முதுகுடிகள் ஆங்காங்கே எபிரேயம், கிரேக்கம், இலத்தீன், சமஸ்கிருதம் என்ற பண்பட்ட மொழிகளுக்கு உரியவராக வாழ்ந்துவந்தனர் ஆனல் காலப்போக்கில் எபிரேயமும்

இலத்தீனும் கிரேக்கமும் சம்சுகிருதமும் இறந்துபட்ட மொழிகளாக மாறிவிட்ட நிலையிலும், தமிழ்மொழியானது அன்று இருந்தது போலவே இன்றும் இளமையும், எழிலும், வலிமையும் ஒருங்கே அமைந்து இருப்பது கன்னித் தமிழின் தனிச்சிறப்பு!

உலகத் தமிழ்

9. இதுவரை செய்த ஆராய்ச்சியின் பயனாக 'உலகத் தமிழ்' என்ற சொற்றொடரின் பாகுபாட்டையும் பின்னணியையும் புரிந்துகொண்டு, இச்சொற்றொடருக்கு நேரடியான பொருள் என்ன இருக்க வேண்டும் என்பதைக் கவனிக்க முற்படலாம். தமிழ் உலகம் என்று சொன்னது வேங்கடத்திற்கும், குமரிக்கும் கடல் எல்லைகளுக்கும் உள்ளிட்டு அமைந்து இருக்கும் தமிழகத்தைக் குறிப்பது. ஆனால் உலகத் தமிழ் என்பது இதைவிட மிகப் பரந்த ஒரு கருத்தை வெளியிடுகின்றது. அதன் உட்பொருளை அறிந்துகொள்ளுவதற்குத் தமிழும், தமிழரும் உலகத்திற்குச் செய்த தொண்டு என்ன, உலக அறிஞர்கள் தமிழுக்குச் செய்த தொண்டு என்ன, இவ்விரண்டின் பயனாக எவ்வாறு தமிழ் ஒரு உலக மொழியாகக்கூடிய தகுதியும் வாய்ப்பும் பெற்றிருக்கின்றது என்று ஆராய்தல் நலம்.

தமிழும் தமிழரும் உலகத்திற்குச் செய்த தொண்டு

10. நான் முன்னமே சொன்னபடி கடைச்சங்க காலத்திலேயே பாண்டி நாட்டு மன்னன் ஒருவன் உரோம் நாட்டுக்குத் தூதுவனை அனுப்பி இருந்தது தமிழ்நாட்டு இலக்கியத்திலும், உரோம் நாட்டு வரலாற்றிலும் குறிப்பிடப்பட்டு இருக்கிறது. இது வாணிகத் தொடர்பு காரணமாக ஏற்பட்ட தூது என்றுதான் கொள்ளவேண்டி இருக்கிறது மொழித் தொடர்பு அதிகமாக இருந்ததாகத் தெரியவில்லை. ஆனால் ஏறக்குறைய இதே காலத்தில் தமிழ் மொழியின் பல சொற்களும் கருத்துக்களும் சம்சுகிருத மொழியில் எழுதப்பட்ட வேதங்களிலும் ஆகமங்களிலும், மற்றும் சகல கலைகளிலும் பிணைக்கப்பட்டு இருப்பதைக் காண்கிறோம். சம்சுகிருத மொழி, தமிழுக்கு எவ்வளவு கொடுத்

ததோ அவ்வளவு திரும்பப் பெற்றுக்கொண்டு இருந்தது என்று சொன்னால், அது மிகையாகாது. ஒரு காலத்தில் அதிகமாகத் தமிழ் மொழியில் புகுத்தப்பட்டு இருந்த சொற்களும் கருத்துக்களும், காலப்போக்கில் அவசியம் இல்லாத காரணத்தால், மறைந்துவிட்டன. இது நிற்க, தமிழ் ஆர்வங்கொண்ட தமிழர்களும் தமிழ்ப் பண்பாட்டையும் தமிழர் கலையையும், மொழியையும், கம்போடியா, இந்தோனேசியா, சீன முதலிய பகுதிகளுக்குப் பல நூற்றாண்டுகளுக்கு முன்னரே எடுத்துச்சென்று இருக்கின்றனர். இந்தோசீனாவில் மூன்றாவது நூற்றாண்டைச் சேர்ந்த ஒரு கல்வெட்டில், பாண்டியன் ஸ்ரீமாறனின் பெயர் சம்சுகிருதத்தில் எழுதப்பட்டு இருக்கிறது. இந்த நாடுகளில் எல்லாம் பல கோவில்களும் கல்வெட்டுகளும், கடல் கடந்த தமிழர்களின் பண்பாட்டுக்குச் சான்றாக இன்றும் இருக்கின்றன. கம்போடியாவிலுள்ள அங்கோர் வாட் என்ற உலகப் பிரசித்திபெற்ற இந்துக் கோவில் தமிழர் சமயமும் பண்பாடும் கலையும் அப்பகுதியில் பரவியிருந்ததற்கு நிலையான சான்று. பத்தாம் நூற்றாண்டின் இறுதியில் இராசராச சோழன் கடார மன்னனோடு நல்லுறவு கொண்டு நாகையில் புத்தப்பள்ளி அமைக்க உதவி, ஆனமங்கலம் என்ற கிராமத்தை மான்யமாகக் கொடுத்தது வரலாறு. மார்க்கோ போலோ பதின்மூன்றாம் நூற்றாண்டிலேயே சீனாவில் ஒரு இந்திய வணிகக்குடி இருப்பையும், கோவிலையும் கண்டதாக எழுதிவைத்து இருக்கிறார். கிழக்கிந்தியப் பகுதிகள் பலவற்றில், தமிழ்முறைக் கோயில் கோபுரங்களும் கல்வெட்டுக்களும் காணப்படுகின்றன. தமிழ்க் கல்வெட்டு இல்லாத இடத்தில் சம்சுகிருதக் கல்வெட்டுக்கள்கூடத் தமிழர்களின் பண்பாட்டுஆதிக்கத்திற்குச், சான்றாகக் காணக் கிடைக்கிறது. இது நிற்க, சமீபகாலம்வரை தாய்லாந்திலும் கம்போடியாவிலும் இந்துப் பூசாரிகள் தமிழிலும் சம்சுகிருதத்திலும் மந்திரங்கள் ஓதி வந்தனவாகத் தெரியவருகிறது. கம்போடியாவில் இந்து விக்கிரகங்கள் பலவும் காணப்படுகின்றன. காரைக்கால் அம்மையார் நடேசரின் காலடியில் இருப்பதாகச் சமைக்கப்பட்ட பத்தாம் நூற்றாண்டு விக்கிரகம் தஞ்சாவூரிலும், கங்கைகொண்ட சோழபுரத்திலும் உள்ள இது மாதிரியான சிலைகளைப்போல அமைந்துஇருக்கிறது. இதுவன்றி தமிழர் வணிக முறையிலும் அலுவல் முறையிலும், பண்பாட்டு வளர்ச்சி வகையிலும், இலங்கை, பர்மா, மலேசியா, இந்தோசீனா

இந்தோனீசியா, கம்போடியா, பீசித்தீவு, மரீச்சியசுத்தீவு போன்ற பல இடங்களுக்குப் பல காலங்களுக்குமுன் சென்று குடியேறி இருக்கிறார்கள். அவர்களில் சிலர் வெளிநாட்டிலே சம்பாதித்த பணத்தை வீடு கொண்டுவந்து சேர்ப்பதிலேயே கருத்தாக இருந்தபோதிலும் பலர் ஆங்காங்கே குடியேறி அப் பகுதிகளைத் தங்களுடைய நிரந்தரத் தாய்நாடாக மாற்றிக் கொண்டு, பலவகைகளிலும் நாட்டுப்பணிசெய்துவாழ்ந்தார்கள். அவர்கள்தான் உண்மையிலேயே உலகத்திற்குத் தொண்டுசெய்க தமிழர்கள் ஆவார்கள். சமீப காலத்தில் நடந்த உலகத்தமிழ் மாநாட்டின்போது. அந்நாடுகளில் இருந்துவந்த தமிழர்களைக் கண்டு கேட்டபோது தமிழ்நாட்டு மக்கள் மிகவே பூரிப்பு அடைந்தனர்.

தமிழுக்கு உலக அறிஞர்கள் செய்த தொண்டு

11· கடைச்சங்க காலத்திற்கு முன்னதாகவே தமிழ்நாட்டிற்குவந்த வடநாட்டு அறிஞரான அகத்திய முனிவர், தமிழ் கற்றுத் தமிழ் இலக்கியம் எழுதினார். அவரது மாணவரான ஒல்காப் பெரும்புகழ்த் தொல்காப்பியனார் "தொல்காப்பியம்" எழுதினார் என்பதை நாம் அறிவோம். வடவர் தமிழுக்குச் செய்த தொண்டு இது. சிலப்பதிகாரக்கதை நிகழ்ந்த காலத்திலேயே உரோம்முதலிய மேல்நாடுகளிலிருந்த "யவனர்கள்" மதுரைக்கும், பூம்புகாருக்கும் வந்திருந்து, வணிகப் பண்பாட்டுத் தொடர்பை நிலைநிறுத்தினர். பிற்காலத்திலும் பல வெளிநாட்டு அறிஞர்கள் தமிழ் கற்றுப் புலமைபெற்றுத் தமிழ்த்தொண்டுசெய்துவந்தனர். இதேபோன்று பிற்காலத்தில் மேல்நாட்டில் பிறந்து கிறித்துவ மதத் தொண்டர்களாகத் தமிழகத்திற்கு வந்த மறைத்திரு பெஸ்கி என்னும் வீரமாமுனிவர், கால்டுவெல், போப் முதலிய பெரியோர்களும் சிறந்த தமிழ்த் தொண்டு செய்திருக்கின்றனர். வீரமாமுனிவர்தான் முதல்முதலாகத் தமிழுக்கு அகராதி கொடுத்தார். தமிழை நன்கு கற்றுத் தேம்பாவணி பாடினார் கால்டுவெல் தமிழைச் சிறப்புறப் பயின்று, மற்றும் திராவிட மொழிகளையும் திறம்பட ஆராய்ந்து, 'தென்னிந்திய மொழிகளின் ஒப்பிலக்கணம்' என்னும் சீரிய நூலை இயற்றித் தந்தார். அறிஞர்

கால்டுவெல் கருத்துப்படி, தமிழோடு சேர்ந்த திராவிடமொழிகள் வடமொழியிலிருந்து தனிப்பட்ட தோற்றமும் வரலாறும் உள்ள மொழிகள். மறைத்திரு போப்ஐயர் அவர்கள் திருவாசகத்தை மொழிபெயர்த்தது மாத்திரம் இன்றிப் பல இலக்கிய இலக்கண நூல்களும் இயற்றிஇருக்கிறார். இவ்வாருக வெளி நாட்டு அறிஞர்கள் பலர், சென்ற சில நூற்ருண்டுகளாகவே தமிழுக்கு அரிய சேவைகளைச் செய்துஇருக்கின்றனர். தமிழ்ப் புத்தகங்களை முதலாவது அச்சிட்டதுகூட, சேசு சபையைச் சேர்ந்த ஒரு பெரியார் என்பது தெரியவருகின்றது.

உலகத் தமிழ் மாநாடு

12. இந்த இருவகைத் தொண்டும் ஒன்றை ஒன்றுதழுவிய முறையில், தமிழ் மொழியும் உலகமும் நல்ல பயன் பெறும் வகையில், பழம் நழுவிப் பாலில் விழுந்தது போலச் செய்தது, சமீப காலத்தில் தோன்றிய உலகத்தமிழ்மாநாடு என்ற அமைப் பாகும். இதற்காகப் பணியாற்றியவர்கள் பேராசிரியர் ஜீன் பிலியோசாத்து என்ற பிரெஞ்சு தேசத்துத் தமிழ் அறிஞரும், மலேசியா நாட்டில் தமிழ்ப்பேராசிரியராக இருக்கும் தமிழர், மறைத்திரு தனிநாயகம் அடிகளாரும் ஆவார்கள். முன்னவர் தலைவராகவும், பின்னவர் செயலாளராகவும் குழு அமைத்து முதலாவது உலகத் தமிழ்மாநாடு, இரண்டாண்டு காலத்திற்கு முன் கோலாலம்பூரில் சிறப்புடன் நடந்தது. அதற்குப்பிறகு இந்த அறிஞர்களின் ஆற்றல் மிகுந்த பெரும் தொண்டாலும் நம் நாட்டுத் தலைவர்கள், அறிஞர்களின் ஆர்வமிக்க ஒத்துழைப் பாலும் உலகத் தமிழ் மாநாடு இந்த ஆண்டுத் தொடக்கத்தில் தமிழகத் தலைநகரமாகிய சென்னையில் சீரும் சிறப்புடன் வெற்றி கரமாக நடந்தேறியது அடுத்த மாநாடு கலையுலகத்தின் தலை நகரான பாரிசு நகரத்திலேயே நிகழவிருக்கிறது.

தமிழ் ஒரு உலக மொழி

13. இவற்றில் எல்லாம் இருந்து தெரிய வருவது என்ன வென்ருல் உண்மையிலேயே தமிழ் ஒரு உலக மொழி என்பதாம்! பல்லாயிரக்கணக்கான ஆண்டுகளாக இலக்கிய இலக்கண வளத் தோடு தனித்து நின்று சிறப்புப் பெற்றுத் திராவிட மொழிகளில்

தனிமொழியாகத் திகழ்வது தமிழாகும். மொழி வளர்ச்சிக்கும் சிறப்புக்கும் உரிய கலையும், பண்பாடும் தமிழ்மொழிக்குப் பின்னணியாக அமைந்து இருக்கின்றன. ஆகவே உலக மொழியாக இருக்கக்கூடிய தகுதி, தமிழுக்கு உண்டு. உலக மொழி என்றால் உலகத்தில் உள்ள எல்லா நாட்டினரும் சாதாரண வாழ்க்கையில் பேச வேண்டிய மொழி என்ற பொருள் அன்று. உலகத்தில் எல்லா நாட்டு மக்களும் தமிழ்நாட்டின் கலையையும் பண்பாட்டையும் தெரிந்துகொள்ள, விருப்பிக் கற்று ஓரளவு தேர்ச்சியும் பெறக் கூடிய மொழி என்று தான் பொருளாகும். இன்று உலகத்திலே பல நாடுகளில் உள்ள சர்வகலாசாலைகளில் தமிழ் மொழியும், தமிழ்ப் பண்பாடும், கலைகளும் பாடங்களாக அமைந்து இருக்கின்றன. இன்னும் புதைந்து கிடக்கும் நம் இலக்கிய இரத்தினங்களைத் தேடி எடுத்து உலகத்தினர் அறிந்து கொள்ளும் வகையில் மொழி பெயர்ப்புச் செய்து கொடுத்தால் தமிழின் சிறப்பு இன்னும் அதிகமாக உலகப் பிரசித்தி அடையும் என்பதில் ஐயம் இல்லை. உலகத்திற்குத் தமிழ் மொழியை நல்ல முறையில் பரப்புவதோடு வடநாட்டிலும் தமிழ்மொழியை அங்குள்ள மக்கள் நல்ல முறையில் புரிந்துகொள்ளும் வகையில் பரப்புவது இன்றியமையாதது.

தமிழர் கடமை.

14. ஆனால் தமிழ் மொழி, உலக மொழியாக எல்லோராலும் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டுமானால். அதற்குரிய தமிழ் மக்கள் தங்கள் கலையாலும், பண்பாட்டாலும், ஒழுக்கத்தாலும் அன்று எப்படி உயர்ந்தவர்களாக இருந்தார்களோ, அப்படியே இன்றும் உயர்ந்தவர்களாக இருக்கிறோம் என்பதை உலகத்திற்குக் காட்டவேண்டும். நாட்டில் இடைக்காலத்தில் ஏற்பட்ட குறைபாடுகள், தமிழ் மொழிச் சிறப்புக்கும் தமிழர் பண்பாட்டிற்கும் ஒவ்வாதவை. இவை எல்லாவற்றையும் விரைவில் போக்கி, மொழிச் சிறப்பாலும், கலைப்பெருமையாலும், பண்பாட்டு உயர்வாலும், கடின உழைப்பாலும் அதன் பயனாக ஏற்படும் வாழ்க்கைத்தர மேம்பாட்டாலும், தமிழர்கள் உயர்ந்தவர்கள், தமிழ் மொழி உலக மொழியாக இருக்கத் தகுந்தது என்பதை எல்லோரும் உணரும்படி செய்தால், அதுவே தமிழ் மொழிக்குத் தமிழர்கள் செய்யும் ஒப்பற்ற தொண்டாகும்.

ஒலியின் தனிவண்ணம்

—*—

சு. இராசாராம். எம். ஏ.,
(அண்ணாமலைப் பல்கலைக் கழகம்)

கலை வேறு அறிவியல் வேறு என்ற நீண்ட வெளி குறுகி அவை இரண்டறக் கலந்து பரிமளிக்கும் சிறப்பு, காலம் வரையறுத்த செயல்களில் தலையாயது எனலாம். முந்தியதின் தெளிவும் பிந்தியதின் ஆற்றலும் சேர்ந்து உருவாக்கிய புதிய துறைகள் வாழ்வின் மறுமலர்ச்சிக்குமட்டுமே ஊன்றுகோலாக அமையாமல் அறிவின் புது வேகத்திற்கும் வளர்ச்சிக்கும் வித்திட்டன வியப்பன்று. கல்வித்துறையில் மெல்லெனவே நுழைந்து வரும் அறிவியல் கூறுகள் மனிதனை ஆச்சரியத்தில் ஆழ்த்துகின்றன. அவைகளே காலத்தின் புதுக்கோலங்களாகப் புதுமை வடிவம் பெறுகின்றன. மொழியை முழுப் பொருளாகப் போற்றி வந்த பண்பும், அதையே பிரித்துப் பிரித்து ஆராய்ந்த ஆழ்ந்த அறிவும் மொழியின் தோற்றத்தோடு அமைந்துவிட்ட செம்மையையும், பின்னர் அதுபெற்ற வளமையையும் முறையே கூறுகின்றன இருபதாம் நூற்றாண்டின் தொடக்கம் மொழியியல் (Linguistics) துறையில் சிறந்ததொரு மாற்றத்தை விளைவித்தது ஒலிகள் புறக்கண் அளவில் ஆராயப்பட்டு வந்த நிலை மாறி இயந்திரங்களின் மூலம் அவைகளின் நுண்ணிய தன்மைகள் ஆராயப்பட்டன இவ் ஆய்வு முறைக்கு வித்திட்டவர்கள் ரோமன் யாக்கோப்சன் (Roman Jakobson) ஃபேண்ட் (Fant), ஹாலே (Halle) போன்ற அறிஞர்கள் ஆவார். இவ் ஆய்வு முறையினை விரிவாகக் காண்போம்:

மொழியின் மிகச்சிறிய அலகு (Unit) ஒலியன் (Phoneme) ஆகும். ஒலியளவில் வேறுபாடு இல்லாத இரு ஒலியன்களை வேறுபடுத்திக் காட்ட உதவும் ஓர் ஒலியனின் வண்ணம் (Feature) அதன் 'தனி வண்ணம்' (Distinctive Feature) எனப்படும். இத் தனி வண்ண ஆய்வுத் திறனுக்குத் "தனி வண்ணப் பகுப்பு

ஆராய்ச்சி" (Distinctive Feature Analysis) என்று பெயர். மொழி நூலறிஞர் இவ்வண்ணங்களைப் பன்னிரு வகையாகப் பிரிப்பர்.

1 "ஓர் ஒலியன் மற்றொரு ஒலியனிடமிருந்து தன்னை வேறுபடுத்திக் காட்டும் ஒலிவண்ணங்கள் பலவற்றை உள்ளடக்கியுள்ளது" என்றபுளூம் . பீல்டின் (Bloomfield 1933) கருத்தினையும், 2 "ஓர் ஒலியனின் குணங்களாகக் கருதப்படும் அதன் வண்ணங்களேஒலிஆராய்ச்சிக்கு அடிப்படையாகும்" என்றட்ருபட்ஸ்காயின் (Trubetzkoy 1939) கொள்கையினையும் தளமாகக்கொண்டு 3 "ஓர் ஒலியன் பல்வேறு வகையான ஒலிவண்ணங்களால் ஆனதொரு கூட்டு மூலமாகும்" என்ற கோட்பாடு 1952-ஆம் ஆண்டு யாக்கோப்சன், ஃபேண்ட், ஹாலே போன்ற அறிஞர்களால் மொழிநூல் வரலாற்றில் நிலை நிறுத்தப்பட்டது. சுருங்கக் கூறின் தனிவண்ணப் பகுப்பு ஆராய்ச்சி, ஓர் ஒலியனை அதனோடு தொடர்புடையதும் மற்றோர் ஒலியனிலிருந்து வேறுபடுத்தக் கூடியதுமான ஒலிவண்ணங்களைத் தன்னுள் அடக்கி ஒன்றாகக் கணிக்கிறது. இத் தனி வண்ணப் பகுப்பு ஆராய்ச்சியே ஒலி வழங்கும் நிலைகளை (Distributions) பகுத்து ஆராயும் முறைக்கு அடிப்படையாகும் என்று ரோமன் யாக்கோப்சன் கூறுகிறார். மேலும். ஒலி வழங்கும் நிலைகளின் பாகுபாடு (Distributional Class'fication) இரண்டு ஒலிகள் ஒலிக்கின்ற அளவில் வேறுபாடு இல்லாதவை என்பது போன்ற கோட்பாடுகளை அடிப்படையாகக் கொண்டது என்றும், இக்கோட்பாடுகளே இரண்டு ஒலிகள் இருவேறு ஒலியன்களா என்பதைப்பகுத்து உணரத் துணைபுரிகின்றன என்றும் கூறுகிறார். ஒலியளவில் ஒற்றுமை உடைய இரு ஒலிகள் அவை வழங்கும் நிலைகளிலும் ஒற்றுமை உடையனவாய் இருப்பின் அவை இருவேறு ஒலியன்கள் என வரையறுக்கப்படும் எடுத்துக்காட்டாக 'ச'கரமும், 'ஜ'கரமும் இருவேறு ஒலியன்கள் ஆகும் இவை இரண்டும் இன்றைய தமிழில் ஒலியளவில் வேறுபாடு இல்லாது மொழி முதலில் வந்து வழங்குகின்றன இவற்றின் வண்ணங்களை ஆராயின் 'ஜ'கரம், 'ச'கரத்தினின்றும் வேறுபடும் அதன் தனி வண்ணமாக "அதிர்வொலி வண்ணம்" (Voice--ness) ஏற்றுக் காணப்படுகிறது.

இவ்வாராய்ச்சி 'இருதலைப் பாகுபாட்டை' (Binary Apposition) தலையாயகொள்கையாகக்கொண்டுள்ளது. விளங்கக் கூறின், ஓர் ஒலி வாயின் உள் உறுப்புக்களின் அதிர்வோடு பிறக்கிறது என்று வைத்துக் கொள்வோம். அவ்வொலி 'அதிர்வொலி வண்ணம்' நிறைந்தது என்பது '+' (Plus) என்ற குறியால் குறிக்கப்படுகிறது. அவ்வாறு இல்லையாயின் '—' (Minus) என்ற குறியால் காட்டப்படுகிறது. மேலே கூறிய 'ச'கரத்தையும், 'ஜ'கரத்தையும் எடுத்துக்காட்டாக ஒப்புக்கொண்டால் அதன் வண்ணங்கள் கீழ்க்கண்டவாறு குறிக்கப்படும்.

	ச்	ஜ்
மெய்யொலி வண்ணம்	+	+
உயிரொலி வண்ணம்	—	—
அதிர்வொலி வண்ணம்	—	+

அதிர்வொலிவண்ணம் 'ஜ'கரத்தின் தனிவண்ணமாகக் குறிக்கப்படுமாற்றைக் காணலாம். இம்முறையே மொழியாராய்ச்சியின் எல்லா நிலைகளுக்கும் பொருந்துகின்ற அடிப்படைத் தத்துவம் என்பதை ஏற்கின்ற மொழி நூலறிஞர் ஒருபுறம் இருக்க, மொழியமைப்பின் அடிப்படைத் தத்துவம் இதுவன்று எனவும், ஆய்வாளரால் வலிந்து புகுத்தப்பட்டதொரு பாகுபாடேயாகும் என்பாரும் உளர்.

தனிவண்ணப் பகுப்பு ஆராய்ச்சி, அதன் ஆய்வு முறைகளாக மூன்றினைக் கூறுகிறது. ஒலி பிறக்கும் போது வாயின் உள்ளே உள்ள உறுப்புக்களின் அசைவுகளையும், வாயின் புறமாற்றங்களையும் அடிப்படையாகக் கொண்டு அதன் வண்ணங்களைக் கண்டு அறியும் முறை 'ஒலிப்பு முறை' (Articulatory Process) எனப்படும். நாவின் தொடுநிலை, இதழ் குவிதல், இதழ் விரிதல், இதழ் மூடித் திறத்தல் ஆகியவை இம்முறையின் அளவு நிலைகள் ஆகும்

மற்றொரு முறை 'சோனோகிராப்' (Sonograph) என்னும் கருவி மூலம் ஒலியின் வண்ணங்களை ஆய்வதாகும். இக்கருவியோடு

இணைக்கப்பட்டு இருக்கும் ஒலிவாங்கியில் (Mike) முதலில் ஓர் ஒலி ஒலிக்கப்படுகிறது. பின்னர் அவ்வொலி மீண்டும் மீண்டும் ஒலித்துக்கொண்டு இருக்க ஒரு கோளத்தில் சுற்றப்பட்டு இருக்கும் காகிதத்தில் அவை ஒலி அலைகளாகப் பதிவு செய்யப் படுகின்றன. அவ்வொலிப் பதிவின் (Formant Structure) அமைப்பினைக் கணித்து அதன் வண்ணங்கள் நிர்ணயிக்கப்படுகின்றன. இம்முறை 'கேட்பு முறை' (Acoustic Process) எனப்படும்.

ஒலியின் பிறப்பு முறையைப் புலனறிவால் (Perception) உணர்ந்து வண்ணங்களை அறிவது மூன்றாவது முறையாகும். இம்மூன்று முறைகளில் ஒலி உறுப்புக்களின் அசைவுகளைக் கொண்டு ஒலியின் வண்ணங்களைக் கண்டு அறியும் 'ஒலிப்பு முறையும்' (Articulatory Process) ஒலிப்பதிவின் மூலம் கண்டு அறியும் 'கேட்பு முறை'யுமே (Acoustic Process) சிறந்தன. ஏனெனில் புலனறிவால் உய்த்து உணரப்படும் ஒலியின் வண்ணங்கள் சில நேரத்தில் தவறான முடிவுக்கும் வழி வகுக்கலாம். அதாவது இம்முறை மனிதனின் புலனறிவாற்றலை அடிப்படையாகக் கொண்டது. இவற்றுள்ளும் முன்னர்க் கூறப்பட்ட ஒலிப்பு முறையே சிறந்தது என்பாரும் பின்னர் மொழிந்த கேட்பு முறையே பயன் உடையது என்கின்ற மொழி நூலறிஞரும் உண்டு.

உலக மொழிகள் அனைத்திலுமுள்ள ஒலிகள் உயிர், மெய் என்னும் இருபெரும் பிரிவுகளாய் இலக்கணத்தில் இடம்பெறுகின்றன ஆகவே இவ்விரண்டும் மொழியின் 'அடிப்படை முதல் வண்ணங்களாக' (Fundamental Source Features) இவ்வாராய்ச்சியில் வரையறை செய்யப்படுகின்றன. 'உயிரொலி வண்ணம்' (Vocalicness) மிகுந்து காணப்படுகின்றவை 'உயிரொலிகள்' (Vowels) எனவும், 'மெய்யொலி வண்ணம்' (Consonantality) மிகுந்தவை 'மெய்யொலிகள்' எனவும் கூறப்படும் இவை பிறக்கும் போது ஏற்படுகின்ற உறுப்புக்களின் அசைவுகளை வைத்தோ அன்றி 'சோனோகிராம்' காகிதத்தின் ஒலிப்பதிவினை வைத்தோ வேறு பல வண்ணங்களை அறியலாம். இவைகளுள் ஒன்றிலிருந்து மற்றொன்றைப் பிரிக்கின்ற தனி வண்ணமாக உயிரொலி வண்

ணமோ மெய்யொலி வண்ணமோ இருப்பதில்லை. கட்புலனால் பார்க்கின்ற ஒலியுறுப்புக்களின் அசைவிலும், செவிப்புலனால் கேட்கின்ற ஒலியின் ஓசையிலும் நுண்ணிதாய் மறைந்து இருக்கின்ற வண்ணமே ஓர் ஒலியனின் 'தனி வண்ணம்'. தனி வண்ணங்கள் எல்லாம உலக மொழிகள் அனைத்திற்கும் பொதுவாயினும் ஓர் ஒலியனின் தனிவண்ணம் அதற்கே உரிய சிறப்பு வண்ணமாக அதுசார்ந்த மொழியைப் பொறுத்த அளவில் கருதப் படுகிறது தொன்மையான இலக்கண நூல்கள் ஒலியின் பிறப்பையும், அது வழங்கும் நிலைகளையும், மொழியில் புணருமாற்றையும் விளக்குகின்றனவேயொழிய அதன் தனிவண்ணங்களை ஆராயவில்லை. சுருங்கக்கூறின் ஒலிகள் ஒன்றிற்கொன்று பிறக்கின்ற அளவில் வேறுபாடு உடையன என்று மட்டுமே அவைகள் கூறுகின்றன இருந்தபோதிலும் பழந்தமிழ் இலக்கண நூலாகிய தொல்காப்பியம் ஒலிகளின் அடிப்படை முதல் வண்ணங்களை ஆய்ந்ததோடு அமையாது சில தனிவண்ணங்களையும் தொகுத்துக் காட்டுகின்றது. ஓர் ஒலியனிலிருந்து மற்றோர் ஒலியனை வேறுபடுத்துவதிலும், அதற்கென்று ஒரு தனி வண்ணத்தைக்கண்டு பிடிப்பதிலும் மட்டுமே தொல்காப்பியர் காட்டிய பிறப்பியல் இன்றைய 'தனிவண்ணப் பகுப்பு ஆராய்ச்சிக்' கோட்பாட்டினின்றும் வேறுபடுகிறது எனலாம்.

இத் தனிவண்ண ஆய்வு முறையில் தமிழ் மொழியின் உயிரொலிகளாகிய 'அ'கரமும், 'ஆ' காரமும் 'ஒலிப்பு முறை'யில் எவ்வாறு ஒன்றிலிருந்து மற்றொன்று வேறுபடுகிறது என்பதைப் பார்ப்போம். இவ்விரு ஒலியன்களின் வண்ணங்கள் பல இருப்பினும் மொழிநூல் பயிலாதாரும் இம்முறையினைப் புரிந்து கொள்ளுமாறு வேண்டி ஒரு சில வண்ணங்களே குறிக்கப்படுகின்றன. 'அ' கரமும் 'ஆ' காரமும் பிறக்கும்போது வாய் திறப்பதால் 4. 'அங்காப்பொலி வண்ணம், (Compactness) அவைகளின் வண்ணங்களில் ஒன்றாகக் கண்டுக் கூறப்பட்டது. 'ஆ' காரம் 'அ'கரத்திலின்றும் வேறுபடும் அதன் தனி வண்ணமாக 'நெடிலொலி வண்ணம்' (Tenseness) காணப்படுகிறது. விளக்கக் குறியீட்டுப் பட்டியலில் இரு ஒலிகளும் கீழ்க்கண்டவாறு குறிக்கப்படுகின்றன.

	அ	ஆ
மெய்யொலி வண்ணம்	—	—
உயிரொலி வண்ணம்	+	+
அங்காப்பொலி வண்ணம்	+	+
நெடிலொலி வண்ணம்	—	+

உயிரொலிகளின் வண்ணங்களை வகுக்கும் முகத்தான் இங்கு மெய்யொலி வண்ணம் '—' என்ற குறியால் காட்டப்பட்டிருப்பது மிகையாக (Redundant Feature) இருப்பினும், மெய்யொலிகள் எனத் தமிழ் இலக்கணத்தில் பகுக்கப்பட்டிருக்கின்ற ல், ள், ழ் போன்ற ஒலியன்கள் மெய்யொலி வண்ணத்தோடு உயிரொலி வண்ணமும் உடையன என்பது குறிப்பிடத்தக்கது.

ஒலிகளின் இந்நுண்ணிய வண்ணங்கள் மேன்மேலும் ஆராயப்பட்டு வருகின்றன. அண்ணாமலைப்பல்கலைக் கழகத்தின் மொழியியல் துறை இதற்கென ஓர் ஆய்வுக் கூடத்தினை நிறுவியுள்ளது என்பது கவனிக்கற்பாலது.

மேற்கோள் :

1, 2, Phonetic Variation and Acoustic Distinctive Features—Clara N Bush.

3. Preliminaries to Speech Analysis-Roman Jakobson, C. Gunnar M. Fant, Morries Halle.

4. தொல் எழுத்து. 4. 85.

"பாவையரும் பந்தாட்டமும்"

நெல்லை, நெல்லையப்பன் பி. ஏ.,
இந்தியப் பண்பாட்டுக் கல்லூரி, பழனி.

'பாவையரும் பந்தாட்டமும்' என்ற தலைப்பினை நோக்கும் பொழுதே இஃது இற்றைக்குப் பாவையர் ஆடும் கையுதைப்பந்து (Volleyball) பூப்பந்து (Badminton) போன்ற விளையாட்டுகளைப் பற்றியதோ என எண்ணத் தோன்றும். இவ்வகையான பாவையரது பந்தாட்டமானது சமீபமாகத் தோன்றியதொன்றன்று. இவ்வகையான விளையாட்டுகள் சங்க காலத்திலும் அதற்குப் பிற்பட்ட காலங்களிலும் காணப்படுகின்றன. நம் பழந் தமிழகப் பாவையரும் பந்தாட்டத்தில் சிறந்து விளங்கினர்கள் என்பதற்கு நம் இலக்கியங்களிலேயே சான்றுகள் உள. இத்தகைய பந்தாட்டங்கள் உலா, மற்றும் பிள்ளைத் தமிழ் (பெண்பால்) நூல்களின் அம்மானைப் பருவம் போன்ற பகுதிகளில் இடம் பெறுகின்றன. இப்பந்தாட்டத்தினால் காதல் விளைவதோடன்றிப் பல்வேறு நிகழ்ச்சிகளும் நடைபெற்றுள்ளன. அவற்றை ஒன்றன் பின் ஒன்றாக நோக்குவோம்.

கொங்கைகள் வென்ற பந்து:

குற்றாலத்தின் குறும்பல வீசர் உலாவிற்குப் புறப்பட்டு வருங்காலை வசந்தவல்லியின் பந்தாட்டத்தினை விளக்குகின்றார் திரிகூடராசப்பக் கவிராயர். வசந்தவல்லியின் உடல் வனப்பினைக் கூறவந்த புலவர் அன்னவளின் ஒவ்வோர் உறுப்பினையும் நன்கு விளக்குகிறார். அவளுடைய சிவந்த கைகளின் வளைகள் 'சலீர், கலீர்' என்றும் 'வெற்றி, வெற்றி' என்றும் கூறுவனபோல் ஒலித்து அசைய, அவளது இடையானது இனி இருப்பது ஐயமென்று கூறுவது போல் சிலம்பின் ஒலியோடு தண்டை ஒலியும் கலந்து தோன்றி அசையப் பந்தாடுகின்றாள். அவள் கொங்கையின்............ திறம் கூறப் புகுந்த ஆசிரியர், பந்துகளை அவளது கொங்கைகளின்

கொடிய பகை என்று கூறி அப்பகையினைத் தாங்கள் வென்று விட்டோம் என்று குழைந்து ஆடுகின்றன என்றும் குறிப்பிடுகின்றார். இவர் இக்கருத்தினைக் கூறும் பாடலிலும் மற்றும் இதற்குப் பின்வரும் பாடல்களிலும் வரும் சீர் அமைப்பும் சந்தமும் நோக்கத் தக்கன.

செங்கையில் வண்டு கலின்கலின் என்று செயஞ்செயம்
என்றாட இடை
சங்கதம் என்றுசிலம்பு புலம்பொடு தண்டை
கலந்தாட இரு
கொங்கை கொடும்பகை வென்றனம் என்று குழைந்து
குழைந்தாட மலர்ப்
பைங்கொடி நங்கை வசந்த சவுந்தரி
பந்து பயின்றாளே.

—திருக்குற்றாலக் குறவஞ்சி.

உடன்போக்கு ஒறுத்த பந்து:

எட்டுத்தொகையுள் ஒன்றான நற்றிணையின்கண் கயமனார் என்னும் புலவர் பாடலில் தலைவி ஒருத்தி தன் தலைவனோடு உடன்செல்ல முற்படுகிறாள். எனவே அவள் ஓர் நாள் வைகுபுலர் விடியலில் புறப்பட எழுகின்றனள். எழுந்தவள் தன் சிலம்பொலி பிறர்க்குக் கேட்பின் தன் உடன்போக்கினை அறிந்து விடுவர் என்னும் அச்சம் மேலிட அவற்றைக் கழற்றி ஓரிடத்தில் வைக்கச் செல்கிறாள். வைக்கச் சென்ற இடத்தில் வரிபுனைப் பந்தினைக் காண்கின்றாள் காணவும் தன்னுடன் பந்து விளையாடிய தோழியருடைய நினைவு அவளுக்கு வருகின்றது அவர்கள் தன்னுடைய பிரிவை எண்ணி வாடும் நிலையினைக் கற்பனை செய்து தன்னுயிர்க் காதலனைக்கூட மறந்து தன் முயற்சியினைக் கைவிடுகின்றாள். அவளுடைய கண்கள் கலுழ்ந்தன. இதுவும் பந்து விளையாட்டால் வந்துற்ற பயனே.

"..............................முதன் முழங்கும்
வைகுபுலர் விடியல் மெய்கரந்து தன்கா
லரியமை சிலம்பு கழீஇப் பன்மாண்

வரிபுனை பந்தொடு வைஇய செல்வோள்
இவைகாண் தோறு நோவர் மாதோ''

—நற்றிணை 12

இந்திரன் தன் வில்லோ

மங்கை ஒருத்தி தன் அகங்கைகளாகிய அழகிய இடத்தில் ஐந்து பந்துகளை வைத்து ஆடுதலாலே அப்பந்துகள் அன்னவள் அணிந்துள்ள மாலையைச் சூழும் வண்டுபோலக் கீழே வந்து உடனே பொங்கி மேலெழுந்து சென்று முறைகுலைந்து வீழ்த லன்றி அவளது செவ்விய கயற்கண்ணும் புருவமும் கூடத் திரியுமாறு அழகுசெய்கின்றன. அம்மங்கையின் பந்து விளையாட்டினைக் கண்டு வண்டும் தேனை நுகராது நின்று பாடுகின்றது. அவள் பந்தாடும்பொழுதே மாலை, குங்குமம் போன்றவற்றை அணிகின்ருள். இங்ஙனம் வலிமையுடன் பந்தாடுகின்ற அவளுடைய ஒள்ளிய நெற்றியிலே சுட்டியிலிட்ட சாந்தும், பருத்த முலையிலிட்ட குங்குமமும், செந்துரப்பொடியும், ஒடவைத்த பொற் சுண்ணமும் வியர்வையினுல் கரைந்து ஒழுகி முலைகளுக்கிடையிலே இந்திரத் திருவில் நெகிழ்ந்து ஒழுகிஞற்போல் வீழ்ந்தன.

''பந்துமைந்துற் ருடுவாள்பணைம்முலையிற் குங்குமஞ்
சுந்தரப்பொடிதெளித்தசெம்பொற்சுண்ணம்வாணுதற்
ருந்துசுட்டி யிட்டசாந்தம் வேரின்பார்ந்த டைம்முலை
யிந்திர திருவினெக்கு றுகியென்ன வீழ்ந்தவே.''

—சீவக சிந்தாமணி. விமலையாரிலம்பகம்

பந்தோ அன்றித் தூதோ!

பூவணம் கந்தசாமிப்புலவர் தம் நூலின்கண் பூவண நாதர் உலாவருங்காலை மகளிர் அவர் அழகினைக்கண்டு மையல் கொண்டு மனம் உருகுவதாகக் கூறுகின்ருர். அம்மகளிருள் பதின் மூன்று வயது கடவா மங்கைப்பருவ மங்கையொருத்தி ஒத்த பருவத்து உயிர்த்தோழியர் சூழச் சித்திர மண்டபத்தில் சென்று தங்கி அம்மானை ஆடுகின்றனள். அவ்வாறு அவளது அம்மானை ஆட்டத்தினைக் கூறும்போது ஆசிரியர், முத்துக்கொண்டு இயற்

றிய பந்துமேல் செல்வதற்கும், பின் கீழ் அவள் கையில் வந்து வீழ்வதற்கும் பல்வேறு உவமைகளைக் கூறுகின்றார். அவளது இருகைகளைத் தாமரை மலருக்கும், பந்துகளை மலரில் மாறி மாறி விளையாடும் அன்னப் பறவைகளுக்கும் ஒப்பிடுகின்றார். மேலும், பந்து அவள் கையிலிருந்து மேல் செல்வதை இறைவனிடத்தில் அம்மங்கை தூதுவிடும் அன்னம் போன்றதெனவும் அப்பந்து கீழே வருதல் அயனுகிய அன்னம் காணுத நாதனுயிற்றே என்று அவ்வண்ணம் போகாது மீளுகின்றதெனவும் பந்தினைப் பல்பொருளுவமையாக்குகின்றார்.

—திருப்பூவணநாதருலா

சந்திரனைக்கண்டு புழுங்கிய வெய்யோன்:

இதோ மதுரை மீனுட்சியம்மை பிள்ளைத் தமிழில் ஓர் காட்சி. மதுரை மீனுட்சியம்மை அம்மானை ஆடும்பொழுது அந்த அம்மானைப் பந்துகளுக்கு ஒப்புமையாகச் சந்திரனையும் சூரியனையும் சித்திரித்திருப்பதைக் காண்போம். குலையிற்பொருந்திய காந்தள் மலர்போன்ற தளிர்த்தலையுடைய கையில் செம்மையான மாணிக்கத்தாற் செய்த அம்மானையானது, முத்தால் செய்யப் பட்ட அம்மானை முன் செலவும் அதன்பின் செல்லுந்தன்மை தாமரை மலராகிய தன் மனைவியிடத்தில் பதினறு கலைகளையுடைய வெள்ளிய கதிர்களையுடைய சந்திரன் புணர்ந்து செல்ல அதனைப் பார்த்துப் புழுக்கம் அடைந்த வெம்மையான கதிர்களையுடைய சூரியனும் பின்தொடர்ந்து போவதை ஒத்திருக்கின்றது என்றார் குமரகுருபரர் மேற்கூறிய கூற்றில் அமைந்துள்ள ஒப்புமை ஈண்டு நோக்கற்குரியதொன்றும்.

"குலைப்பட்ட காந்தள் தளிர்க்கையிற் செம்மணி
குயின்றவம் மனைநித்திலம்
கோத்தவம் மனைமுன் செலப்பின் செலுந்தன்மை
கோதை மனையாட்டிபால்
கலைப்பட்ட வெண்கடர்க் கடவுள்தோய்ந் தேகஅது
கண்டுகொண் டேபுழுங்கும்

காய்கதிர்க் கடவுளும் பின்தொடர்வ தேய்ப்பக்
கறங்கருவி தூங்கவோங்கும்..............''

—மதுரை மீனாட்சியம்மை பிள்ளைத் தமிழ்.

வரிப்பந்து கொண்டோடியவன்
வளையணிந்த கையைப் பற்றினமை:

கபிலரின் கலித்தொகைக் காட்சிகளிலே குறிஞ்சிக்கலியிலே ஓரிடத்தைக் காண்போம் தோழிக்குத் தலைவி தலைவனைப் பற்றிக் கூறுகின்றனள் 'ஒளிபொருந்தின வளையினை உடையாய்! ஈதொன்றைக் கேளாய்! தெருவிடத்து நாம் உண்டிகளை ஆடும் மணலாற் செய்த சிற்றிலைக் காலால் அழித்துக் கூந்தலிலே அடைவித்த கோதையை அறுத்து வரியினையுடைய பந்தினை எடுத்துக்கொண்டு ஓடி நாம் நோவத்தக்க தொழில்களைச் செய்யுஞ் சிறியனாகிய காவலில்லாதவன் முன்னொரு நாளிலே, அன்னையும் யானுஞ் சேர இருந்த அளவிலே 'இல்லில் உறைகின்றவர்களே உண்ணப் படுந்தண்ணீரை வேட்டேன்' எனச் சொல்லி வந்தவனுக்கு அன்னை 'விளங்குகின்ற பூணினையுடையாய் உண்ணு நீரைத் தகட்டுப் பொன்னாற்செய்த கரத்தாலே வார்த்து உண்ணப்பண்ணுவித்துவா' வென்று சொன்னாள்; என்று சொல்லுகையினாலே யானுஞ் சிறுபட்டியாயிருக்கின்ற தன்னை அறியாதே சென்றேன்; சென்றபின்னை அவன் என்னுடைய வளையணிந்த முன்கையைப்பிடித்து நலிகையினாலே அலமந்து, 'தாயே இவனொருவன்செய்ததோர் செயலைப்பாராய்,' என்றேனாக அத் தாயும் கூப்பிட்டு ஓடிவருதலைச் செய்ய அதனை மறைத்து அங்ஙனஞ் செய்ததனை யான். 'உண்ணுநீர் விக்கி வருந்தினான் காண்' என்று ஓர் பொய்யைக் கூறினேனாக, அத் தாயுந் தன்னை முதுகைப் பலகால் அழிந்ததழித்துத் தடவப் பின்னை என்னைத் தன் கடைக் கண்ணாலே கொல்வான்போலே பார்த்துப் பின் மன மகிழ்ந்தான்

''சுடர்த்தொடீஇ கேளாய் தெருவில் நாம் ஆடும்
மணற்சிற்றில் காலிற் சிதையா அடைச்சிய

கோதை பரிந்து வரிப்பந்து கொண்டோடி
நோதக்க செய்யுஞ் சிறுபட்டி மேலோர்நாள்
அன்னையும்யானும்.................
தன்னைப் புறம்பழித்து நீவமற் றென்னைக்
கடைக்கணாற் கொல்வான்போல் நோக்கி
நகைக்கூட்டஞ்
செய்தானக் கள்வன் மகன்"

—கலித்தொகை - குறிஞ்சிக்கலி

இவைபோன்ற, பாவையர் பந்தாட்டச் செய்திகள் நம் தமிழ் இலக்கியத்தில் நிறைய உள்ளன. அவற்றைக் கண்டு இன்பமடைவோமாக!

தண்டியாசிரியரும் தேவாரமும்

மு. அருணாசலம் எம். ஏ.,
திருச்சிற்றம்பலம்.

தண்டியாசிரியர் 'கோமூத்திரியே' என்று தொடங்குகின்ற சூத்திரத்தில் பன்னிரண்டு சித்திரச் சவியைக் கூறுகிறார். இவற்றுள் ஏழாவது 'காதை கரப்பு' என்பது. காதை கரப்புக்கு இலக்கணம் பின்வருமாறு அங்குச் சொல்லப்பட்டுள்ளது. 'காதை கரப்பு என்பது ஒரு செய்யுள் முடிய வெழுதி அதனீற்று மொழிக்கு முதலெழுத்துத் தொடங்கி ஒவ்வோரெழுத்திடையிட்டு வாசிக்கப் பிறிதொரு செய்யுட் போதுவது.' இதற்கு உதாரணப் பாடலாகப் பின்வரும் இன்னிசை வெண்பா தரப்பட்டுள்ளது.

'தாபேயா நோவவா வீரு வெமது நீ
பின்னை வெருவா வருவதொ ரத்தப
வெம்புகல் வேறிருத்தி வைத்திசினிச் சைகவர்
தாவா வருங்கலநீ யே'

இதன் பொருள்:— 'தாயாய் உள்ளவனே, யாங்கள் வருந்துகின்ற அவாவினை நீக்கு. எமது சார்வாக உள்ள நீ, பின்னை எமக்கு அச்சமாக வருவதை ஓர்வாயாக. அது கெட எமக்குப் புகலாய் உள்ள இடம் வேறாக அமைத்து வைப்பாயாக. எங்கள் இச்சையை நீ கைக்கொள்வாயாக. எங்களுக்குக் கேடில்லாத அரிய ஆபரணமாகவுள்ள நீ'. இதனுள் கரந்திருக்கும் காதையை ஆசிரியர் பின்வருமாறு காட்டுகிறார். இங்குக் காட்டிய பாடலில் ஈற்று மொழி 'நீயே.' அதற்கு முதல் எழுத்து ல. லகரம் மொழிக்கு முதலாகாமையின், அதனை நீக்கி, ககரம் முதலாகக் கொள்க. கொள்ளவே, வருகிற செய்யுள் பின்வரும் வஞ்சித்துறையாகும். இவ்வாறு ஒரு பாடலில் மற்றொரு செய்யுளின்

சொல்முறையே மறைந்து நிற்றலால் இது காதை கரப்பு எனப் பட்டது; காதை-சொல், கரப்பு-மறைவு.

'கருவார் கச்சித்
திருவே கம்பத்
தொருவா வென்னீ
மருவா நோயே.'

இது திருஞான சம்பந்தர் பாடிய கச்சியேகம்பம் மூன்றாந் திருமுறை, திருவிருக்குக் குறள் என்ற பதிகத்தின் முதற் பாடல் தண்டியில் வஞ்சித்துறை என்று குறிப்பிட்டது. இங்கு இப்பெயர் பெற்றிருக்கிறது. 'மனமே நீ கச்சித் திருவே கம்பத்து உறையும் ஒப்பில்லாதவனே என்று சொல்ல, கருவார் நோய் மருவா' என்பது தண்டி உரையாசிரியர் கூறும் உரை.

தண்டியாசிரியர் தம் அலங்காரத்துக்கு எடுத்துக் காட்டாகத்தாமேசெய்தமைத்துள்ளபாடல்களில் மிகப்பல பாடல்கள் சிவபெருமான் துதியாக உள்ளன. அவற்றுள் இக்காதை கரப்பும் ஒன்று. தண்டியாசிரியர் இவ்வாறு சம்பந்தர் தேவாரத்தை எடுத்து அதைக் காதை கரப்பாக மற்றொரு பாடலில் அமைத்திருப்பது மிகவும் அரியதொரு செய்தி. தண்டியாசிரியர் சைவர் என்பது அவர் செய்துள்ள மேற்கோள் பாடல்களால் நன்கு விளங்கும்; இச்சம்பந்தர் பாடல் அதை இன்னும் வலியுறுத்திக் காட்டுகிறது.

சம்பந்தர் திருமுறையில் இப்பாடலில் பாட பேதம் காணப்படுகிறது. பின்னிரு வரிகளும் 'ஒருவா என்ன-மருவா வினையே' என்ற பாடம் அங்குள்ளது.

இனி, யாப்பருங்கல விருத்தி ஒழிபியல் சித்திரக்கவிமாலை கூறுகின்ற 'மாலைமாற்றே சக்கரம் சுழிகுளம்' என்ற சூத்திரத்தின் உரையில், காதை கரப்பு, கரந்துறைப்பாட்டு என்ற இரண்டுக்கும் இலக்கணம் கூறி, மேற்கோள் பாடல்களும் தரப்பட்டுள்ளன. இங்குத் தண்டியாசிரியர் கூறிய காதைகரப்பின் இலக்கணம், கரந்துறைப்பாட்டின் இலக்கணமாகவும், தண்டியார் கூறிய கரந்

துறைப்பாட்டின் இலக்கணம் இங்குக் காதை கரப்பின் இலக்கண மாகவும் மாறியிருப்பது குறிப்பிடத் தக்கது. வீரசோழியமும் இப்படி மாற்றியே குறிப்பிடுகிறது.

இப்படியே மாறன் அலங்காரம் 288-289-ஆம் சூத்திரங் களில் சரந்துறைச் செய்யுளும், காதை கரப்பும் சொல்லப்பட் டுள்ளன இவை யாப்பருங்கலவிருத்தி இலக்கணத்தைப் பின் பற்றுகின்றன. ஏன் இம்மாறுபாடு என்பது விளங்கவில்லை. எனினும் மாறனலங்காரத்தார், 'இவற்றை மாறுடுவாரும் உளர்' என்று எழுதியிருக்கிறார்.

இரண்டு பெயர்களுக்கும் ஓரளவு பொருள் ஒன்றுதான். கருத்தை மட்டும் இவ்வாசிரியர் வெவ்வேறாகக் கொண்டிருக்கின் றனர்.

---○---

தமிழின் பழைய வரிவடிவும் அதற்குப் புதிய ஒலிவடிவும்!

பேராசிரியர். மு. உலநாதன்,
செந்தமிழ்க் கல்லூரி, மதுரை.

அறிஞர் எண்ணம்

'தமிழ் எழுத்துக்களில் சீர்திருத்தம்' தேவை என்னும் ஒரு கருத்து கடந்த முப்பத்தைந்து ஆண்டுகளாகத் தமிழ் அறிஞர் உலகில் பெரும் விவாதத்திற்குரியதாக இருந்து வருகிறது.

அதன் பயனாகத் தமிழ் அறிஞர்கள் பலர் தத்தமது ஆராய்ச்சிக்குத் தோன்றியவாறெல்லாம் சிலபல கருத்துக்களைக் கட்டுரை வடிவிலும் நூல் வடிவிலும் செய்தித்தாள்களின் மூலமாகவும் செய்து காட்டியிருக்கின்றனர்.

அக்கருத்துக்கள் எல்லாம் முற்றமுடிந்த ஒரு கருத்தாக எல்லோராலும் ஏற்றுக்கொள்ளத்தக்கதாக அமையாத காரணத்தினால் சில கருத்துக்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டும் சில கருத்துக்கள் மறுக்கப்பட வேண்டியதாகவும் அமைந்துள்ளன.

எப்படி யிருப்பினும் அக்கருத்துக்கள் தமிழ் எழுத்துச் சீர்திருத்தத்தை வரவேற்பதோடு எதிர்கால அறிஞர்களுக்குச் சிந்தனை விருந்தாகவும் அமைந்துள்ளன என்பதை மறுப்பதற்கில்லை.

இவ்வகையில் நூல்வடிவில் இரண்டு நூல்களும், கட்டுரை வடிவில் சில கட்டுரைகளும் படிக்க நேரிட்டது. எந்த நூலும் எந்தக் கட்டுரையும் தெளிந்த ஒரு கருத்தினை விளக்கிச் செல்லவில்லை. சிலவே ஏற்றுக்கொள்ளத் தக்கதாயும் பல தள்ளத் தக்கதாயும் அமைந்தே இருந்தமை கண்டேன்.

எனவே அக்குறைகள் எல்லாம் விலக்கப்பட்டு முற்ற

முடிந்த ஒரு கருத்தினைத் தமிழின் மரபு பிறழாது கூற வேண்டும் என்ற அவா என் மனத்துத் தோன்றியது அதன் விளைவே இங்குக் கட்டுரை வடிவம் பெறுகிறது.

நூலும் கருத்தும்

முதலில் காண நேர்ந்த நூல்களையும் கட்டுரைகளையும் சிறிது விளக்கிப் பின் புதுவன கூறுவேன்.

1. தமிழெழுத்துச்சீர்திருத்தம் (ஆசிரியர்—புலவர் குழந்தை) 2. 'Reform in Tamil Alphabets' (Kuttaalam) 3. 'The Tamil Script Reform' (T. P Meenakshisundaram) Tamil culture Vol II No. I 1952 4 'The Existing Tamil Scripts and its Need for Elaboration' (N. Gnanasambandan. B. E.)

புலவர் குழந்தை :—

முதலில் தமிழெழுத்துச் சீர்திருத்தம் என்னும் நூலில் ஆசிரியர் புலவர் குழந்தை அவர்கள் தன் ஆராய்ச்சி முழுமையும் பயன்படுத்தித் தமிழுக்கு ஒரு புது வரிவடிவையே தருகிறார்.

இதனால் தமிழ் உயிர் எழுத்துக்கள் பன்னிரண்டும் பத்தாக்கப்படுகிறது. அந்தப் பத்தில் அ, ஆ, ஆகிய இரண்டு எழுத்துக்களும் சிறிது மாற்றத்தோடு அவரால் ஏற்றுக்கொள்ளப்படுகிறது.

'ஆ' என்னும் எழுத்தை 'அா' என்று காட்டுகிறார் வரிவடிவம் சிறிதே மாறியுள்ளது மீதமுள்ள இ, ஈ, உ, ஊ, எ, ஏ, ஒ, ஓ என்னும் எட்டெழுத்துக்களும் முற்றிலும் புது உருவம் பெறுகின்றன. பழைய வரிவடிவம் அதனில் கிஞ்சித்து இல்லை.

இதனால் பதினெட்டு மெய்களிலும் ஏறுகின்ற உயிர் அ, அா தவிர 18X8 என்னும் முறையில் 144 புதிய உயிர் மெய் வரிவடிவங்களைப் பெறுகிறது.

பெறுகின்ற புதிய உயிர்மெய் வடிவங்கள் இன்றைய உயிர்மெய் யெழுத்துக்களைப் போலத் 'தட்டெழுத்துக்

கருவிக்கோ' 'அச்சு வசதிக்கோ' 'விசைதட்டப்பிற்கோ' பொருந்தி வராத முறையில் இல்லாமல் காலத்தையும் இடத்தையும் குறைக்கின்ற முறையிலேயே அமைக்கப்பட்டிருக்கின்றன.

எடுத்துக்காட்டாக.

ஃ அ, ஆ, இ, ஈ, உ, ஊ, எ, ஏ, ஒ, ஓ, அய் அவ்
ஃ அ, அா, ｠, ʼ, உ., ., 6, ே, ெ, ௌ, அய் அவ்

இப்படி உயிரின் வரிவடிவங்கள் மாற்றப்பட்டுள்ளன.

இவ்வரிவடிவங்களை இன்னுமொருமுறை கூர்ந்துநோக்குங்கள். அ, ஆ, அய், அவ் ஆகிய நான்கு எழுத்துக்களைத் தவிர மற்றவை யாவுமே எழுத்துக்கள் போல் காட்சி நல்கவில்லை. மாறாக அவையனைத்தும் பழைய குறியீடுகள் போலவே (ெ, ே, ை, ா.) காட்சியளிக்கின்றன.

இவ்வுயிர் எழுத்துக்களை மெய்யொடு புணர்த்து உயிர் மெய்யாக்கும்போது :

க, கா, க｠, கʼ, கஉ, ..., கெ, கே, கெ, கௌ, கய், கவ், க்

எனப் பக்கத்தில் இட்டுக் கொள்வோமானால் க, கா, கி, கீ, கு, கூ, என உயிர் மெய்களாகி விடுகிறது.

உண்மையில் சிறந்த முறைதான் என்ற போதிலும் தோன்றுகின்ற உயிர்மெய் வடிவங்கள் அனைத்துமே நம் உணர்வை இன்றைய தமிழ் எழுத்துக்களில் இருந்து வேறு பிரித்து விடுகிறது.

அனைத்து உயிர் மெய்யெழுத்துக்களுமே புதுமையாக ஆக்கப்படவேண்டிய ஒன்றுதானா என்ற சிந்தனைக்கு இடம் ஏற்படுகிறது.

அதனால் இக்கண்டுபிடிப்பு, எழுத்துக்களே இல்லாத பேச்சுவழக்கில் மட்டும் கருத்துக்களைக் கூறிக்கொண்டிருக்கிற ஒரு மக்கட் கூட்டத்தாருக்கே மிகவும் பயன்படும். அவர்களுக்கு இது மிகச் சிறந்த எழுத்துக்களை உடைய மொழியாகவும் அமையும் என்பதில் சிறிதும் ஐயமில்லை.

வாழ்க புலவர் குழந்தையின் புலமை! விரிவை அவர்தம் நூலுள் கண்டுகொள்க.

திரு. குற்றாலம்:—

அடுத்து 'REFORM IN TAMIL ALPHABETS.' என்னும் ஒரு சிறு ஆங்கில நூல். இதனைக் காலஞ் சென்ற கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளை அவர்களின் பெயரனை திரு. குற்றாலம் என்பவர் வெளியிட்டுள்ளார்.

ஆங்கில எழுத்துக்கள் இருபத்தாறு அவைகள் உயிர் 5 மெய் 21.

உயிரும் மெய்யும் கூடிப்பிறக்கின்ற உயிர்மெய்கள் அவற்றில் தனித்த எழுத்துக்களாக இல்லை.

தமிழில் க்+இ—கி, க்+உ—கு.

என்று கூடுகின்றபோது உயிர்மெய்யென்று 216 புது வடிவங்கள் தோன்றுகின்றன.

ஆங்கிலத்தில் K+A—KA
W+E—WE

என்று உயிரும் மெய்யும் கூடியபோதும் அதே வரிவடிவை யுடைய இரண்டு எழுத்துக்கள்தான் வந்து நிற்கின்றன. இதனால் ஆங்கிலம் 26 எழுத்துக்களுடனேயே நின்று தன்னை வளர்த்துக் கொள்ள முடிகிறது ஆனால் தமிழ் 216 வடிவங்களைப் பெற்று இவ்வளவு எழுத்துக்களா? என்ற மலைப் பைத் தந்து நிற்கிறது. இக்குறை நீங்க ஆங்கிலத்தைப் போலவே தமிழின் உயிர்க்குறில் ஐந்தையும் (அ. இ. இ, உ, எ,) மெய் பதி னெட்டையும் எழுதலாம் என்று எடுத்துக்காட்டித் தன் கருத் தைத் தமிழ் நல்லுலகின் முன் வைக்கிறார்.

அதற்குமுன் உயிர் மெய்யெழுத்துக்களாகிய க, ச, ட, த ப, ற என்ற எழுத்துக்களைப் புள்ளியின்றி இருப்பினும் அவற்றை 'இக்', 'இச்', 'இட்', 'இத்', 'இப்' 'இற்'. என்பது போன்றே உச்சரிக்க வேண்டும.

''புள்ளியில்லா எல்லா மெய்யும்'' என்ற தொல்காப்பியர்

நூற்பாவின்படி 'மெய்யும்' என்றதனுல் உயிர்மெய்யின் ஓசையை மெய்யோசையாகவே உச்சரிக்க வேண்டும். (தொல்-சூ. 17) இதனுல் எழுத்துக்களுக்கு மேற் புள்ளி யிருக்க வேண்டும் என்ற அவசியம் இல்லாமற் போய்விடுகிறது.

எனவே புள்ளிபெற்ற மெய்யெழுத்துக்கள் என்ற வரிவடிவம் தேவையில்லாத ஒன்று. இதனுல் 'க' என்பதை 'க்' (இக்) என்று மெய்யோசை இட்டே புதுமுறையில் பழகிக்கொண்ட பின்பு ஆசிரியரின் கருத்துக்கு வாருங்கள்.

க்+அ — க்அ; கஅ (க)
க்+இ — க்இ' கஇ (கி)
க்+ஆ — க்அஅ; கஅஅ (கா)
க்+ஈ —[க்இஇ; கஇஇ (கீ)

இம்முறை ஆங்கிலத்தில் K+A—KA
P+A—PA

என்பது போன்றே இருக்கிறதல்லவா? எனவே 216 உயிர்மெய் வடிவங்கள் தேவையற்று இருபத்து மூன்று எழுத்துக்களுக்குள் ளாகவே முடிந்துவிடுகிறது என்று தனது ஆராய்ச்சியை உலவ விடுகிருர். இதன் நடைமுறை வழக்கினையும் அவரே ஒரு குறளின் மூலம் எழுதியும்காட்டுகிருர். சற்றுக்கவனமாக அதனைக் கவனிக்க வேண்டுகிறேன்.

"சொல்லுக சொல்லைப் பிறிதோர் சொல் அச்சொல்லை
வெல்லுஞ்சொல் இன்மை அறிந்து"

"சஒலலஉகஅ சஒலலஅஇப பஇறஇதஒஓரசஒல அசசஒலலஅஇ வஎலலஉஞசஒல இனமஅஇ அறஇநதஉ"

என்று எழுதிக் காட்டியுள்ளார். அச்செழுத்து, தட்டெழுத்துப் போன்ற வசதிகளுக்காகத் தமிழை இப்படித்தான் எழுதிச் சீர் திருத்தம் செய்யவேண்டுமா?

யாப்பிலக்கணத்தில் இவற்றின் நிலை என்ன? முற்றிலும்

மாறுபட்டுப் போகாதோ? வெண்பாவில் பூச்சீரும், கனிச்சீரும், கலித்தளையும் வந்து மயங்குகிறதே? ஏனிந்த மயக்கமோ?

இதனல் ஏதேனும் இலாபம் உண்டா? நூலாசிரியரே கூறுகின்றார்.

Generally two disadvantages are Experienced practicaly. 1. The Reformed Scripts occupy more space. 2. The Reformed Scripts take more time.

இப்படி அதிக இடத்தையும் அதிக காலத்தையும் தருகின்ற சீர்திருத்தம் தமிழ்மொழிக்குத் தேவைதானா? அவசியம் தானா? சிந்தித்துப் பதில் கூறுங்கள்.

மேலும் மேலே கண்ட குறளின் வரி வடிவத் தோற்றம் இப்போதய நிலையிலிருந்து எவ்வளவு தூரம் பின்னோக்கியும் விலகியும் இருக்கிறது என்பதைச் சற்று எண்ணுங்கள்.

தமிழ் எழுத்துச் சீர்திருத்தம் என்பது இன்றைய தமிழின் வரிவடிவத் தோற்றத்தில் இருந்து வெகு தூரம் விலகாமலும், மாற்றம் பெருமலும் இருக்கவேண்டும். ஆனல் ஆங்கில எழுத்துக்களைப் போல் குறைந்து மிக மிக அளவில் பயன் தருதல் வேண்டும் அதைச் செய்யும் அறிஞர்கள் தமிழகத்தில் பிறக்க வில்லையா? தமிழ்மக்களின் உணர்வையும், பழமையையும், மரபு காக்கும் பண்பையும் மறந்து செய்யும் எந்த எழுத்துச் சீர்திருத்த மும் தமிழகத்தில் வேரூன்ற முடியுமா? இதையெண்ணிப் பாராமலே அறிஞர் பெருமக்கள் சீர்திருத்தம் செய்யப்புகுவது எற்றுக்கோ?

திரு. தெ. பொ. மீ.

அடுத்து "The Tamil Script Reform" என்னும் தலைப்பில் திரு. தெ. பொ. மீனட்சிசுந்தரனர் அவர்கள் ஆங்கிலக் கட்டுரை ஒன்றை "தமிழ்க் கல்சர்" என்னும் இத

ழொன்றில் எழுதியுள்ளார், Vol. II No. I. 1952.

அதனில் அவர் எல்லோரையும் போலவே பல எழுத்துக்களுக்கு மாற்றம் தேவை என்று கூறுகிறுர் அதனோடு தமிழ் மொழியில் உள்ள உகர ஓசையை உடைய எழுத்துக்களுக்கு ஒரு புதுக் கலப்பைத் தருகிறுர்.

தமிழ் எழுத்துக்களில் உகர ஓசையுடைய எழுத்துக்களே (கு, சு, டு, து, பு, று, யு, என்று) குறுமையிலும் நெடுமையிலும் பல வேறுபட்ட வரிவடிவங்களைத் தந்து நம்மைக் குழப்பிக் கொண்டிருக்கிறது. அவ்வெழுத்துக்களுக்கே கூட்டெழுத்துப் பொறியிலும் சரி, அச்செழுத்திலும் சரி நிறைந்த தட்டுங்கோல்களையும் எழுத்துக்களையும் செய்யவேண்டியதிருக்கிறது. இது இடர்ப்பாட்டிற்கு உரியதொன்றே, அறிகின்ருேம். அதற்கோர் மாற்றமும் தேவை தான் உணர்கின்ருேம்.

அதற்காக ஆசிரியர் கண்டுபிடித்துக் கூறும் கருத்து ஆபத்தானதாகவும் அருவருக்கத்தக்கதாகவும் இருக்கிறது என்று கூறின் தவறில்லை.

அது என்ன?வடமொழியில் ஜ, ஷ, ஸ, ஹ என்பன போன்ற எழுத்துக்கள் உள்ளன.

அவை உகர ஓசை பெறவேண்டுமானுல் பெறுகின்ற போது புதிய எழுத்தாக மாறுவதில்லை

அவைகள் ஜு. ஜூ, ஷு, ஷூ, ஸு, ஸூ, ஹு, ஹூ, என்று மேலே விலங்கு மட்டும் பெறுகிறது. அதற்குத் துணையாக அவைகள் நாடுவது ு ூ என்ற குறியீடுகளே.

எனவே அக்குறியீடுகளையே நம்முடைய தமிழின் உயிர் மெய்யெழுத்துக்களான க, ச, த, ப, ற, என்பனவற்றின் மீது இட்டுக் கு, கூ (கு, கூ) என்பன போன்று உச்சரித்துக் கொள்ளலாம் என்று தன் கருத்தைக் கூறுகிறுர்.

The கு (ku) and கூ (ku) series as they stand at present defy any such analysis The gordian knot, as has been suggested, can be cut by introducing new symbols for the short U and the long U thus Saving another new letter faces. There are already the simbols in use for some of Grantha-letters included in the new alphabetical list of Twentieth Century as ஜ ஷ ஸ ஹ and க்ஷ. These Symbols are ு and ூ used in ஜு etc Therefore, there is no necessity for going for any new letter face at all, and nothing except prejudice prevents the editors and authors using these forms uniformly for all the letters.

But as matters stand at present feelings run very high whenever there is a suspicion baseless it may be, that Sanskrit usage in being forced on Tamil The very idia of a reform of the Script in resisted from all sides in other countries".

"உள்ளுவதெல்லாம் உயர்வுள்ளல்" என்ற உயர்ந்த, விரிந்த பரந்த மனப்பான்மை தேவையானதுதான். அதற்காக எங்கு? எப்போது? எதில்? என்றெல்லாம் ஒன்றுமே இல்லையா? தமிழர்கள் தமிழ்மொழியில் வடமொழியின் ஆதிக்கம் கூடாது என்று கருதுகிறார்கள். வடமொழியின் ஆதிக்கம் தமிழ்மொழியில் ஏற்படுமோ என்று தமிழர்கள் அஞ்சுகின்றார்கள் என்றால் அதனை ஆதாரமற்ற பயம் என்று எவ்வாறு குறிப்பிடமுடியும்? வடமொழிக்கு உரிய உகர ஓசைக் குறியீடுகளாகிய ு, ூ இவற்றைத் தான் தமிழில் சேர்த்துப் புதிய உகர ஓசையுடைய எழுத்துக்களை உண்டாக்க முடியுமா? அவையின்றி வேறு வகையில் சிந்தனை செய்யக்கூடாதா என்ற கேள்விகள் எல்லாம் எழும்புகின்றன.

தமிழின் உகர ஓசையை உடைய எழுத்துக்களை வேறு மொழிக்குரிய குறியீடுகள் இல்லாமலும்; தமிழ்க்குறியீடுகளை வைத்துமே சீர்திருத்தம் செய்வது சாலச் சிறந்தது. அவ்வாறு செய்யும்போதே பல்வேறு வரிவடிவங்கள் தோன்றாதவாறு பார்த்

துக்கொள்ளவேண்டும். இச்சிந்தனை ஏன் தமிழ் அறிஞர்களிடத்துத் தோன்றாமல் போனது? ஆளுக்கொரு வகையில் கருத்துக்களைச் சொல்லிக் கொண்டுபோனால் தமிழ் மொழியின் கதி என்னாவது?

ஒரு நூற்றாண்டு

இன்னும் ஒரு நூற்றாண்டுக்குப் பின் வரும் மக்கள் வடமொழியில் இருந்துதான் தமிழ் தோன்றியது என்று கூறுவதற்கு இச்சடன் வாங்கல் இன்றே வித்தூன்றப்படுகின்றது என்பதில் மாறுபாடு கொள்ளமுடியுமோ? பத்திரிக்கை ஆசிரியர்களோ, எழுத்தாளர்களோ வேறுபாடு கருதாமல் ஜ, ஒ என்ற குறியீடுகளைத் தங்கள் கதைகளிலும், கட்டுரைகளிலும் எழுதுவதால் மட்டும் அதைத் தமிழ் உலகம் ஏற்றுக்கொள்ளவேண்டும் என்ற அவசியம் இல்லை என்பதை நினைவுகூரவேண்டும்.

திரு. ஞானசம்பந்தன்

அடுத்து, திருவாளர் ந. ஞானசம்பந்தன் பி இ அவர்கள், மதுரைப் பல்தொழில் நுட்பக் கல்லூரியின் (TAMILNAD POLITECHNIC) முதல்வராவர். இவரும் தமிழ் எழுத்துக்களில் சீர்திருத்தம் தேவை என்று தாமறிந்த சில கண்டுபிடிப்புகளைத் தமது கல்லூரி ஆண்டு மலரில் (1967) வெளியிட்டுள்ளார். "The Existing Tamil Scripts and its need for elaboration" என்பதே அவர் தம் கட்டுரையின் தலைப்பு. இவரும் திருவாளர் புலவர் குழந்தையவர்களைப்போலவே உயிர்எழுத்துக்கள் பன்னிரண்டையும் புதிய வடிவில் ஆங்கில எழுத்துக்களின் சாயலாக்கிக் காட்டுகிறார்,

புலவர் குழந்தை அவர்களாவது உயிர் எழுத்துக்களில் உள்ள அ, ஆ, என்ற இரண்டு வரிவடிவங்களைச் சிறிது மாற்றத்தோடு சேர்த்துக்கொண்டார். திருவாளர் ஞானசம்பந்தன் அவர்களோ பழைய உயிரின் வரிவடிவம் பன்னிரண்டையுமே மாற்றிவிட்டார்.

தமிழ் எழுத்துக்களின்—உயிர்—உயிரெழுத்துக்கள்.

அவற்றை வைத்துக்கொண்டு மற்றைய எழுத்துக்களில் மாற்றம்செய்து தமிழுக்குப் பெருமைசேர்ப்பதே தமிழ்மொழிக்கு ஆக்கமும், வளமையும் சேர்ப்பதாக இருக்கமுடியும்.

உயிரை யாராவது சிதைக்க முற்படலாமா? அதை விடுத்து உயிர் எழுத்துக்கள் பன்னிரண்டுமே விலக்கப்படுவதும் புதிய வடிவு பெறுவதும் உயிருக்கே உலை வைப்பது போலாகவே முடியும் என்பதில் ஐயமில்லை.

திருவாளர் ஞானசம்பந்தன் அவர்கள்,

ஃ, அ, ஆ, இ, ஈ, உ, ஊ, எ, ஏ, ஐ, ஒ, ஓ, ஔ
T . . Q [P . .] [P]

என்ற முறையில் பெரும்பாலும் ஆங்கில எழுத்துக்களான T. P. J என்பனவற்றை மாற்றியும் புரட்டியும் தலைகீழாக்கியும் காட்டி அவற்றைத் தமிழின் உயிர் வடிவங்கள் பன்னிரண்டாகக் காட்டுகிறுர்.

மற்றபடி திருவாளர் குழந்தை அவர்கள் காட்டியது போன்றே இவற்றையும் உயிர்மெய்யெழுத்துக்களாகிய க, ச, த.ப என்ற எழுத்துக்குப் பக்கத்தில் போட்டுக்கொண்டால் கி, கு, கெ, கை என்பன போன்ற எழுத்துக்கள் க?; க[; க?; க] என்ற வரிவடிவங்களாக மாறுகின்றன.

விளைவு :-

தட்டெழுத்துப் பொறிக்கும், அச்சு வசதிக்கும் வினைடைப்பிறகும் பொருந்தி வரக்கூடிய கண்டுபிடிப்புதான், மறுக்கவில்லை. ஆனல் இதன் விளைவென்ன? "முதுகுவலிபோய் திருகுவலி வந்ததென்று" சொல்லும்படி ஆங்கிலத்தில் இருந்துதான் தமிழ்மொழி தோன்றியது என்று அவர்களும் சண்டைக்கு வரும் வாய்ப்பிற்கு நாமே பாலம் அமைத்துக் கொடுக்கின்ருேம. வடமொழிக்கும், தமிழ்மொழிக்கும் இருக்கின்ற போராட்டம் போதாதென்று ஆங்கிலத்திற்கும், தமிழ்மொழிக்கும் வேறு போராட்டமா? இத்தகைய தமிழ் எழுத்துச் சீர்திருத்தம் தேவைதானு? சிந்தியுங்கள்.

திருவாளர்களான குழந்தையும், ஞானசம்பந்தமும் உயிர் எழுத்துக்களை வடிவம் மாற்றுகின்றபோது மேலும் முக்கியமான ஒன்றை மறந்துவிட்டார்கள். அவர்களால் உருவாக்கப்பட்ட எழுத்துக்கள், எழுத்துக்கள்போல் வரிவடிவம் பெறவில்லை. எழுத்துக்கள் வேறு, குறியீடுகள் வேறு. க,ச, த, ப என்பன போன்றவைகள் எழுத்துக்கள். ெ, ே, ை, ா என்பன போன்றவை குறியீடுகள்.

எழுத்துக்களில் மாற்றம் செய்யும்போது முக்கியமாகப் புதிய எழுத்துக்களைக் குறியீடுகள் போல் உண்டாக்குவது கூடாது.

எவர்பார்த்தாலும்பார்த்தவுடனேயேஅவ்வெழுத்துக்கள் ஏதோ ஒரு மொழியின் எழுத்துக்கள் என்ற உணர்வு, ஏற்பட்டால்தான் பின்பு அவைகளால் உண்டாகின்ற மொழியை உணர்ந்து படிக்கும் எண்ணம் தோன்றும். பார்த்தவுடனேயே அவ்வெழுத்துக்களின் தோற்றம் எல்லா மொழிகளுக்கும் பொதுவாக வருகின்ற வட்டக்கோடு, சாய்வுகோடு, படுக்கைக்கோடு' அடைப்புக்குறி, வினாக்குறி என்பன போன்று இருக்குமானால் அவ்வெழுத்துக்களின் அழகு குன்றிப்போகும்.

'ஆள்பாதி ஆடைபாதி' என்பதுபோல் எழுத்துக்களின் அழகுபாதி ஒரு மொழியின் சிறப்புக்குக் காரணமாகவும் அமைந்துள்ளது என்பதை அறிஞர் உலகம் சிந்தித்துப் பார்க்கவேண்டும். எனவே எழுத்துச்சீர்திருத்தம் செய்கின்றவர்கள் தாங்கள் கண்டுபிடித்துச் சொல்லும் எழுத்துக்களை எளிமைக்காகவும் வசதிக்காகவும் கோடுகள் போலவோ, குறியீடுகள்போலவோ காட்டுவார்கள். ஆனால் நிச்சயம் அது முற்ற முடிந்த சீர்திருத்தமாக அமைய முடியாது என்பதை யாராக இருந்தாலும் மனத்தில் கொள்ளவேண்டும்.

பண்டைத் தமிழ் அறிஞர்

பண்டைத் தமிழ்ச் சான்றோர்கள் இன்றைய சீர்திருத்தவாதிகளைவிட எவ்வளவு தெளிவு உடையவர்கள் என்பது அவர்களது எழுத்துக்களிலும் குறியீடுகளிலும் தனித்தனியே புலப்

படும். அவர்கள் எழுத்துக்களையும் குறியீடுகளையும் ஒன்றிற்கொன்று முரணாதவாறு வேறு வேறாகவே குறித்துள்ளமை அவர்களது நுண்மாண் நுழைபுலத்தையே காட்டுகிறது. எடுத்துக்காட்டாக ெ, ே, ை, ா; என்பவைகள் வேறு வேறாகவே அமைந்துள்ளமையை அறிக.

எழுத்துக்களும் அவ்வாறே அமைந்துள்ளன. ஆனால் இன்றைய சீர்திருத்தத்தில் உண்டாக்கப்பட்ட உயிர் எழுத்துக்கள் குழந்தை ஞானசம்பந்தம் ஆகிய இருவரின் கண்டு பிடிப்புப் படியும் ெ; e, 6;],], [, P. q என்று வருகின்ற எழுத்துக்களிலே பல, ஏறக்குறைய ஒரே மாதிரியான வரிவடிவத்தை பெற்றிருப்பது மிகுந்த இடர்ப்பாட்டினை விளைவிக்கும் என்பதில் ஐயமில்லை.

கையும் தவறும்:—

பண்டைத் தமிழ்ச் சான்றோர் கண்டு சொன்ன குறியீடுகளை ஒன்றிற்குப் பதில் ஒன்றை ஒரு எழுத்தில் தவறுதலாக இட்டாலும் அது அதன் நெடுமையையோ அல்லது குறுமையையோ தான் காட்டும். எனவே அதனில் உள்ள பிழையைப் பொருளில் மாற்றம் ஏற்பட்டாலும் இடம் பொருள் ஏவல் நோக்கி இது இதுவாகத்தான் இருக்கவேண்டும் என்று ஊகித்துக் கூறமுடியும். எடுத்துக்காட்டாக,

கிரியும் பாம்பும் (தவறு); கீரியும் பாம்பும் (சரி)

கலையும் மாலையும் (தவறு); காலையும் மாலையும் (சரி)

கொடும் கோம்பும் (தவறு); கோடும் கொம்பும் (சரி)

மேற்கண்டவற்றில் குறியீடுகள் சார்ந்திருக்கின்ற எழுத்துக்கள் துல்லியமானவை, தீர்க்கமானவை. எனவே என்ன தவறு என்பதனைத் தெளிவாக அறிந்துவிட முடிகிறது. தட்டெழுத்திலும், அச்சுக்கோர்ப்பதிலும் பிழைகள் நேருவது இயற்கை. அவை பெரும்பாலும் மேற்கண்டவாறு குறியீடுகளின் குறுமை, நெடுமைகளில் ஏற்படுகின்ற பிழையே; அதுவே அதிகமும் கூட. ஓரெழுத்திற்குப் பதில் சம்பந்தமில்லாத வேறொரு எழுத்து விழுவது மிகமிகச் சிறுபான்மை.

உண்மை:—

ஆனல் இவ்வாறின்றிக் குறியீடுகளாலேயே உயிர் எழுத்துக்களைப் புலவர் குழந்தையும் ஞானசம்பந்தன் அவர்களும் காட்டியிருப்பதாலும்-அவைகளும் பல எழுத்துக்களுக்கு ஒரே வரிவடிவமாக இருப்பதாலும்—எல்லா வகையிலும் அதிகமான பிழைகள் சம்பந்தமின்றி ஏற்படுவதற்கு இடமேற்படுகிறது. இதனை அப்பெருமக்கள் உணராதது ஏனே தெரியவில்லை வெவ்வேறு ஓசையுடைய எழுத்துக்களைச் சற்று மாற்றியும்—சாய்க்கும்—தலைகீழாகவும் காட்டியுள்ளதால் அச்சுக்கோப்பில் கணக்கில்லாத பிழைகளே மலிந்து நிற்கும் என்ற உண்மையை மறந்துவிடக் கூடாது. அவர்கள் காட்டியுள்ள எழுத்துக்கள் வெவ்வேறு முறையில் கிடப்பதாலேயே வெவ்வேறு எழுத்துக்களாகக் காட்சியளிக்கிறது. அவைகள் எல்லாவற்றையும் ஒன்று போல் நிமிர்த்தி வைப்போமானல் என்ன ஓசையுடைய எழுத்து என்று சொல்ல முடியாத ஒரு நிலை ஏற்படுகிறது. இந்நிலை இன்றையக் குறியீடுகளுக்கோ எழுத்துக்களுக்கோ இல்லை என்பதை உணரவேண்டும் எடுத்துக்காட்டாக

இ, ஈ, எ, ஏ, ஒ, ஓ
9; . ; 6; ே; ெ, ஒ

என்ற எழுத்துக்களை இ, ஈ, எ, ஏ, ஒ என்ற எழுத்துக்களாகக் கூறுகிறூர்.

எண்ணு எழுத்தா?

முதல் மூன்றைப் பாருங்கள் ஒன்று போல் காட்சி தருகின்றன. ஏறக்குறைய எண்களில் 6, 9 ம் போல் உள்ளன.

ெ—இகர ஓசை
ூ—ஈகார ஓசை
6—எகர ஓசை.

மூன்றும் ஒரே வரிவடிவம். அவைகள் நிலைமாறிக் கிடக்கின்றன. அவ்வளவே இகரத்தை அப்படியே தலைகீழாக மாற்றினல் எகர ஓசையாகி விடுகிறது. இதனல் எத்தகைய விளைவு

களும் பிழைகளும் நேரும் என்பதைச் சொல்லித் தெரியவேண்டு தில்லை.

பண்டையத் தமிழ்ச் சான்றோர்கள் கண்டு சொன்ன குறியீடுகளில்கூட இத்தகைய பெருத்த தவறு ஏற்படுவதில்லையே. இதனை எண்ணும்போதுதான் அவர்களின் அறிவும் திறமும் நுண்மையும் புலப்படுகின்றன. அதே போன்று ஏகார, ஓகாரத்தி லும் நிலை மாறினல் பெரும் பிழையில் முடிகிறது. எடுத்துக் காட்டாக

(ஒ) ஓடி வந்தான் என்பதை

(ெ) ஓடி வந்தான் என்றால்தவற்றைப் புரிந்து கொள்ள முடிகிறது.

(ே) ஏடி வந்தான் என்று (ே) படுக்கையாக விழுவதற் குப் பதில் இப்படி நெடுமையாக விழுவதனல் ஏற்பட்டுவிடுகிறது.

இப்பிழையை எப்படிச் சமயசந்தர்ப்பங்களை நோக்கினு லும் உணர்ந்து கொள்வது அருமை. இத்தகைய நேரத்தில்தான் ஒரே குறியீட்டில் இருவெவ்வேறு ஓசையுடைய எழுத்துக்களை உருவாக்கியதன் தவறு பெரிதும் எண்ணிப் பார்க்க வேண்டிய தாகிறது. இந்நிலை புலவர் குழந்தை திருவாளர் திருஞான சம்பந் தன் ஆகியோர் ஆக்கிய எழுத்துச் சீர்திருத்தத்திலும் ஏற்படவே செய்கிறது.

பிடுநடையும் ஏறு நிலையும்

மேலும் இவர்கள் கண்டுபிடித்துள்ள உயிர் எழுத்துக்கள் உயிர்மெய் யெழுத்துக்களாக மாற்றம் பெறுகிறபோது இன்றைய உயிர்க்குறியீடுகளான (ெ: ே. ை, ா) இவைகள் உயிர்மெய் யெழுத்துக்களின் முன்னும் பின்னும் நிற்பதுபோல்—உயிர் எழுத் துக்களே உயிர்மெய்யின் பின் நிற்கும் ஒரு பரிதாப நிலையையும் எய்துகிறது. அதனல் உயிரின் நிலைத்த தன்மையான காம்பீர்யம் (Magestic) பறிபோய்விகிறது.

உயிர் முதல் மொழி:

அதுதான் அப்படியென்றால் உயிர் எழுத்துக்களை முதல் எழுத்துக்களாகக் கொண்ட சொற்கள் எல்லாம் பார்க்கவே நோய்வாய்ப்பட்ட குழந்தையைப் போல் பரிதாபத்திற்குரிய தாகக் காணப்படுகிறன்றன.

லெய் — இலை ெட்டகம்—ஒட்டகம்.
ெக்கள் — ஈக்கள் ஞொன் — ஒன்றன்.
6டஉ — ஏடு.
ேர் — ஏர்.

இவ்வெடுத்துக்காட்டுகள் புலவர் குழந்தைக்குரியன.

ɖ க்கள் — ஈக்கள்
Pர் — ஊர்
[ன்றா — ஒன்று

இவைபோல் இன்னும் பல திருஞானசம்பந்தன் அவர்களுக்குரியன.

"தமிழுக்கும் அமுதென்று பேர்—அந்தத்
தமிழெங்கள் உயிருக்கு நேர்"

என்று பாடினன் புரட்சிக் கவிஞன் பாரதிதாசன். உயிரின் தன்மை எப்படி இருக்கிறது பார்த்தீர்களா? ஆங்கில எழுத்துக்களையும் குறியீடுகள் போன்ற வரிவடிங்களையும் உயிரெழுத்துக்களாகக் காட்டித்தான் தமிழ் எழுத்துச் சீர்திருத்தம் செய்யப்படவேண்டுமா? இப்படிப்பட்ட கலப்புச் சீர்திருத்தம் செய்வாரை என் சொல்வது?

தமிழின் தொன்மை?

இப்போதே தமிழ் நேற்றுத் தோன்றியமொழி என்று ஒரு கூட்டம் அடித்துப்பேசிவருகிறது. தெரிந்தோ, தெரியாமலோ இத்தகைய சீர்திருத்தங்கள் தமிழ் உலகில் புகுமானால் தமிழ் வடமொழியிலிருந்து தோன்றிய மொழி என்று கூறப்படுகின்ற பொய்க் கருத்தைப் போல் ஆங்கிலத்திலிருந்து தோன்றியதே என்ற கருத்தும் வலியுறுத்தப்படும் என்ற கருத்தை இச்சீர்திருத்தவாதிகள் ஏன் உணரவில்லை?

பிறமொழி எழுத்துக்களில் சில எழுத்துக்களின் ஓசை தமிழ் மொழியில் இல்லைதான். ஒத்துக்கொள்வோம். அதற்காக அவ்வெழுத்துக்களை அப்படியே வடவெழுத்த யினும், ஆங்கில எழுத்தாயினும் கொள்ளவேண்டிய அவசியமில்லை. அவ்வோசை யுடைய புதிய தமிழ் எழுத்துக்களை நல்ல முறையிலேயே உருவாக்கம் செய்ய வேண்டும்.

தமிழுணர்ச்சி:

தமிழின் சிறப்பெழுத்துக்களை வடமொழியோ, ஆங்கிலமோ தன்னிடத்தில் இல்லை என்பதற்காக அப்படியே எடுத்துக் கொள்ளவில்லையே. மாறாக அவர்களுக்குள்ள எழுதுத்துக்களில் ஒன்றை வைத்துத்தானே அவர்கள் தங்கள் ஓசைகளை நிறைவு செய்து கொள்கிறார்கள் அந்த உணர்ச்சி தமிழனுக்கும் வேண்டாமோ? சீர்திருத்தம் என்பது சிந்தித்துச் செய்யவேண்டிய ஒன்று அச்சிந்தனை நாளானாலும் திருத்தம் சொல்ல முடியாத வலுவுடையதாக இருக்க வேண்டும். அதை விடுத்துவிட்டு ஏதோ சொன்னோம் ஏதோ செய்தோம் என்றிருத்தல் கூடாது.

காலம் கடந்த மொழி :

காலம் கடந்த ஒரு மொழியில் சீர்திருத்தம் என்ற பேரால் கை வைக்கின்ற போது சிறுபிள்ளைத்தனமாகவோ விளையாட்டுத்தனமாகமோ ஒரு கருத்தைக் கூறிவிடுமோமானால் அது ஒரு இனத்துக்கே கேடு பயப்பதில் கொண்டுபோய் முடித்து விடும்.

புகழும் பொருளும்

முதுமையின் மூலம் புகழ் வரலாம். பொருள் வரலாம். அவற்றிற்காக 'மொழி நலம் பேணார்' என்னும் இழிபெயரைச் சரிவரச்சிந்திக்காமையால் தமிழ்ச் சான்றோர்கள்பெறவேண்டாம் என்பதே என் கருத்து.

குழப்ப எழுத்துக்கள்

'தமிழ் எழுத்துச் சீர்திருத்தத்தில்' முக்கியமாக உகர ஓசையுடைய எழுத்துக்களைப் பல்வேறு வரிவடிவ வேறுபாடின்றி

இருக்கின்ற பதினெட்டு மெய் வடிவிற்குள்ளேயே காட்டிவிடுவோமானல் தமிழ் எழுத்துச் சீர்திருத்தமே முற்றுப்பெற்று விடும் என்பது என் கருத்து.

இச்சிந்தனை தமிழ் எழுத்துக்களின் மரபை ஒட்டியது. மேலே பார்த்தவைகளைப் போல் மரபு பிறந்தது அல்ல என்று கூறுவேன். அதனுல் பல ஆராய்ச்சியாளர்களின் கருத்துக்களை ஏற்றும், பல புதிய கோணங்களைத் தமிழ் மக்களின் சிந்தனைக்கு வைத்துள்ளேன்.

யாரும் சுருக்க முடியாது

முதலில் தமிழ் மொழியின் பண்டைய வரிவடிவங்களைப் பெரும்பாலும் புதுக்காமல் ஒரு சில மாற்றத்தை மட்டும் தர்க்க ரீதியாகக் கூறிக் காட்டி எழுத்துச் சீர்திருத்தத்தை எல்லா நிலையிலும் பொருந்தி வரக்கூடிய முறையில் குறைத்துக் காட்டியிருக்கின்றேன் விஞேடைப்பாக இருப்பினும் அச்சியந்திரமாயினும், தட்டெழுத்துப் பொறியாயினும் எதுவாயினும் இம்முறையினுல் ஆங்கில எழுத்துக்களின் முறைகளைக் காட்டிலும் சிறப்புடையதாக ஆக்கி யிருப்பதோடு இதைக் காட்டிலும் யாரும் சுருக்க முடியாது என்பதையும் கூறிக்கொள்ளும் வகையில் இதனைச் செய்திருக்கிறேன்.

ஏன்?

எவ்விதமான ஒரு முடிவுமின்றிப் பல்வேறு அறிஞர்களால் பல்வேறு நிலைகளில் இருந்தும் தத்தம் கருத்துக்களையும் புலமையினையும் காட்டும் போக்கிலேயே மேலே கண்ட எழுத்துச் சீர்திருத்தம அமைந்துள்ளது.

தமிழ்மணர்

அதனைத் தமிழ் மக்களின் மனப்போக்கோடு ஒட்டிச் செய்ததாகக் கூறமுடியாது எனவேதான் அதற்கோர் முற்றுப் புள்ளி வைக்க இக்கட்டுரை உருவாயிற்று.

(தொடரும்)

தமிழ் இலக்கியத்தில் ஒன்பதும் பத்தும் ஒரு குறிப்பு.

—※—

இர. பன்னீர் செல்வம்,
கேரளப் பல்கலைக் கழகம், திருவனந்தபுரம்.

தமிழ் இலக்கண இலக்கிய உலகில் ஒன்பது பத்து என்ற எண்கள் மிகவிரும்பிப் பயன்படுத்தப்பெற்றவையாகும். ஆனால் இன்றுவரை திருக்குறளில்தான் பத்துப்பத்துக் குறள்களாகப் பகுத்துள்ள முறை காணப்படுகின்றது என்று பெரும்பாலானோர் கூறிவருகின்றனர் இவர்களெல்லாம் மற்ற தமிழ் இலக்கியங்களையோ அன்றி இலக்கணங்களையோ இந்த நோக்கில் நோக்கியிரார் போலும். இனிமேலும் இவ்வாறான கருத்துக்கள் தோன்றக் கூடாது என்பதற்காகவே இக்குறிப்பு இங்கு எழுதப்பெறலாயிற்று.

தொல்காப்பியத்தை எடுத்துக் கொண்டால் எழுத்து, சொல், பொருள்என்ற மூன்று அதிகாரங்களும் ஒன்பது, ஒன்பது இயல்களாகப் பகுக்கப் பெற்றுள்ளன இயல்களின் அமைப்பிலும் ஒரு முறை இருப்பதை நூலை நோக்குவார் உணர்வர்.

சங்க இலக்கியங்களை எடுத்துக் கொண்டால் ஐங்குறுநூறு பத்துப்பத்துத் தொகைகள் கொண்ட பகுதிகளால் ஆக்கப்பெற்றுள்ளது. அன்னைப்பத்து, வேழப்பத்து, களவன்பத்து, எருமைப்பத்து எனப் 'பத்து' என்ற எண்ணின் பெயருடனேயே வழங்கப்பட்டு வருகிறது.

பதிற்றுப் பத்தினை எடுத்துக் கொண்டால் நூலின் பெயரே பத்து என்ற சொல்லுடன் முடிகின்றது. பத்துப் பத்துப் பாடல்களைக் கொண்ட தொகையாக அமைந்ததே பதிற்றுப் பத்து எனச் சொல்லவேண்டுவதில்லை. இவையெல்லாம் திருக்குறளுக்கு முந்திய இலக்கியங்கள் என்பதில் யாருக்கும் மாறுபாடு

இராது. இவ்வாறு சொல்வதால் குறளுக்குத் தாழ்வு நேரப் போவதொன்றுமில்லை ஆனால் உண்மை என்ற ஒன்றை அனைவரும் உணர்ந்து கொள்ளுவது நன்று.

மேலும், நமது தொகைநூல்களிற்பல, நூறு என்ற எண்ணடிப்படையில் அமைந்து பண்டைத் தமிழ்ச் சான்றோர்தம்உள்ளத்தில் தோன்றியிருந்த ஒரு முறைப்பாட்டினைக் காட்டுவதையும் நாம் சிந்தித்தல் வேண்டும்.

எனவே, தமிழ் அறிஞர்கள் பத்து என்றஎண்ணின் பயிற்சியினைப்பற்றிச் சிந்திக்கத் தொடங்கும்போதும், எழுத முற்படும்போதும் மேற்கூறிய சில செய்திகளையும் உணர்ந்து உண்மைத் தன்மையை உணர்ந்து கொள்வார்களாக.

சங்கச் செய்திகள் :

தமிழக முதல்வர் அண்ணாதுரையவர்கள் மறைவு குறித்து இரங்கல்

—*—

தமிழக முதலமைச்சர், பேரறிஞர் சி. என். அண்ணாதுரையவர்கள், 3-2-1969 திங்கட்கிழமை அதிகாலை (ஞாயிறு இரவு) 12-20 மணிக்கு, இறைவன் திருவடி நீழலடைந்தனர். தமிழ்மக்கள் ஆற்ருெணுக் கண்ணீரைக் காணிக்கையாகத் தந்தனர். நம் மதுரைத் தமிழ்ச் சங்கமும், இத்துயரத்தில் பங்கு கொண்டது. 12—2—69 இரவு 7 மணிக்கு நம் சங்கத்தில், அண்ணு மறைவு குறித்து இரங்கற் கூட்டம் கூட்டப்பட்டது.

திரு திருப்பதி இறைவணக்கம் பாடியபின், சங்கச்செயலர் திரு கி பழனியப்பன் அவர்கள் இரங்கல் கூட்டம் கூட்டப்படுவதன் காரணத்தை விளக்கினுர்கள். பின்பு, சங்கத் தலைவர் தமிழவேள் திரு பி. டி. இராசன் அவர்கள் பின்வரும் இரங்கல் தீர்மானத்தைப்படித்தனர்.

"சிறந்த நாவலரும், சிந்தனையைக் கிளறும் எழுத்தாளரும், அரசியல் மேதையும், தமிழ்ப் பண்பாட்டின் உயிர் ஓவியமுமாக விளங்கியவருமான தமிழக முதலமைச்சர் திருவாளர் சி. என். அண்ணுதுரை அவர்களின் அகால மரணத்திற்கு மதுரைத் தமிழ்ச் சங்கம் தன் பெரும் துயரத்தைத் தெரிவித்துக் கொள்கிறது. அன்னுரின் குடும்பத்தார்க்கு இச்சங்கம் தன் ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறது"

இத்தீர்மானத்தைப் படித்தபின் தமிழவேள் திரு பி டி இராசன் அவர்கள் குறிப்பிட்டதாவது:—

"நான் இதுவரை பொதுமேடைகளில் அண்ணுதுரையைப் பற்றி ஒன்றும் சொல்லவில்லை. சென்னை செரீப் அவர்கள்,

கடற்கரைக் கூட்டத்திற்கு வருமாறு என்னை நேரில் அழைத்தார். இராசாசி மண்டபத்திலும், கடறகரையிலும் கட்டுக்கடங்காத கூட்டத்தினர் நடந்துகொண்ட சில நிகழ்ச்சிகளால், அங்குச் செல்ல என் மனம் இடந்தரவில்லை.

சில மாதங்களுக்கு முன், அண்ணுதுரை சிகிச்சைக்காக அமெரிக்காவுக்குப் புறப்பட்டார். புறப்படுவதற்கு முன், அவருக்காக மதுரை மீனுட்சி கோவிலில் விசேட பூசைகள் செய்து, கோவில் பிரசாதத்தை அவருக்கு அனுப்பி, நல்ல சுகத்துடன் திரும்பி வர வேண்டும் என்று கடிதமும் எழுதி அனுப்பினேன். அதேபோல அவரும் அமெரிக்கா சென்று சுகமாகத் திரும்பி வந்தார்.

அமெரிக்காவிலேயே சில மாதங்கள் தங்கி ஓய்வு எடுத்துக்கொள்வார் என்று நினைத்தேன். ஆனுல் அவர் அவ்வாறு செய்யவில்லை. வந்தபின்பும் அவரை நேரில் கண்டு, பொதுக் கூட்டங்களில் கலந்துகொள்ள வேண்டாம், தவிர்க்க முடியாத ஓரிரு நிகழ்ச்சிகளில் மட்டும் கலந்துகொள்ளுங்கள் என்று சொன்னேன். இதுபற்றி 14—11—68 இல் கடிதமும் எழுதினேன். அக்கடிதத்திற்கு, அவர் "தங்களைப் போன்ற அனுபவமுடைய பெரியோர்கள் சொல்லின்படி என் உடல்நலத்தைப் பாதுகாக்க முயற்சி செய்வேன்" என்று மறுமொழி எழுதினுர். ஆனுல் விதிவசத்தால் அவ்வாறு செய்ய அவரால் இயலவில்லை. தம்மைப் பிடித்த நோய், நெடுங்காலம் வாழவிடாது, இருக்கும்வரையிலும் மகிழ்ச்சியாக இருப்போமே என்று அவர் எண்ணிவிட்டார் போலும்!

கூறப்போனுல் அவருக்கு முதலமைச்சர் பதவியே பிடிக்கவில்லை. கூண்டிலடைக்கப்பட்டதுபோல் நினைத்தார். ஆனுல், அவர் முதலமைச்சராக இல்லாமற்போனுல், நிர்வாகம் சரியாக நடைபெறுது; கட்சிக்கும் நல்ல பெயர் இருக்காது என்று கருதியே அதை ஏற்றுக்கொண்டார். நிர்வாகத்தையும் நல்லமுறையில் நடத்தினுர் அதற்காக அவர் நீடூழி வாழவேண்டுமென்று பிரார்த்தனை செய்தேன்.

ஆனுல், அவர் உடல்நலக் குறைவால் அடையாறு மருத்

துவமனைக்குப்போக வேண்டியதாயிற்று. அமெரிக்க டாக்டர் மில்லரது உதவியை நாடினர். மில்லர், பணத்துக்காகவோ, பெருமைக்காகவோ வரவில்லை. அண்ணுதுரையிடத்துத் தாம் வைத்த பேரன்பினுல் வந்தார்.

அவர், "அண்ணு இருந்த நிலைமையில், சாதாரண சிகிச்சை கொடுத்தால், அவருக்கு மேலும் துன்பமே உண்டாகும் எனபதோடு மட்டுமன்றிச் சிறந்த உடல் நலத்தையும் அவர் பெற முடியாது; ஆனால் இருடியம் ஊசியை உடலுக்குள் வைப்பதன் மூலம் ஒருகால் அவர் நலமடையக்கூடும்; அப்படி இருடியம் ஊசி, உடம்புக்குள் வைத்தால் பத்து நாட்கள்வரை மிகுந்த துன்பப் படவேண்டும்! இந்தப் பத்து நாட்களைக் கடந்துவிட்டால், பிழைத்துக்கொள்வார்!" என்று முதலிலேயே சொல்லிவிட்டுத்தான், இருடியம் ஊசியை வைத்தார் .1-ஆம் தேதி தமிழக ஆளுநரை நான் கண்டு இதுபற்றிப் பேசியபோது, 10 நாள் ஆனதும் பிழைத்துக்கொள்வார் என்று அவர் சொன்னர். கோடிக் கணக்கான மக்களின் வேண்டுகோளுக்குக் கடவுளும் செவி சாய்ப்பார் என்றே நானும் நினைத்தேன். ஆனால் எதிர்பாராதது நடந்துவிட்டது. அவரது மரணம் அவரைப் பொறுத்தமட்டில் நல்லது என்றே நினைக்கவேண்டும் நடமாட முடியாத நிலையில் இருந்தால் மிகவும் தொல்லைப்பட்டிருப்பார் ஆனால் நாட்டைப் பொறுத்த மட்டில் பெரிய நட்டம், ஈடு செய்யமுடியாத பேரிழப்பு! அண்ணுதுரை, பெரிய புகழ்உச்சியில் இருக்கும்போது இறந்தார் தேசிய இராணுவ மரியாதையுடன் அவரது உடல் அடக்கம் செய்யப்பட்டது அதுபோன்ற மரியாதை இந்தியாவில் காந்தி, நேரு போன்ற ஒரு சிலருக்கு மட்டுமே கிடைத்தது. கென்னடி, சர்ச்சில்போன்றவர்களுக்கு அவரவர்களது நாட்டில் இத்தகைய மரியாதை கிடைத்தது. ஆனல், காந்தி, நேரு போன்ரூே அல்லது கென்னடி, சர்ச்சில் போன்ரூே அண்ணுதுரை எதுவும் சாதிக்கவில்லை.

காந்தி ஒரு புதிய தத்துவத்தை உருவாக்கினர். நேரு, நாட்டிற்காகத் தியாகம் செய்த பெரிய குடும்பத்தில் தோன்றித் தியாகம் செய்தார் சர்ச்சில், மேலைநாட்டு நாகரிகத்தைக் காப்பாற்றினர். கென்னடி, அமெரிக்கக் கண்டத்தையே, பொதுவுடைமை அபாயத்திலிருந்து காப்பாற்றினர். இதுபோன்று

அண்ணாதுரை, எதுவும் செய்யாதிருந்தும், கோடிக்கணக்கான மக்களின் உள்ளத்தை அவர் கவர்ந்தது எதனால் என்பதை நாம் சிந்திக்க வேண்டும். 23 மாதங்கள் மட்டுமே அவர் ஆட்சியில் இருந்தார். இச்சுருங்கிய காலத்தில் யாரும், எதையும் சாதித்திருக்க முடியாது. அண்ணாதுரையிடம் மனிதத் தன்மை-மனிதப் பண்பு இருந்ததுதான் அவர் இத்தனை பெரிய செல்வாக்குப் பெற்றமைக்குக் காரணம்.

அடக்கம், பெருந்தன்மை இவ்விரண்டும் சேர்ந்த மனிதத் தன்மை அவரிடம் இருந்தது. பணக்காரர், ஏழை ஆயினும் எந்தச் சாதியாயினும் அவரை அணுகினால் அவர்களுக்கு நீதி கிடைக்குமாறு செய்து வந்தார். இதனால் அவரைப் பார்த்தவர்களிடத்து எல்லாம் அவர் மீது மரியாதை உண்டாயிற்று.

நீதிக்கட்சியின் பொன்விழா மலரை வெளியிடுமாறு அவரை நான் கேட்டுக்கொண்டபோது, 'தங்களைப் பற்றியும் மலரில் எழுதியிருக்கிறேன்; அது சரிதானா என்று பார்த்துப் பின்பு இம்மலரை வெளியிடுங்கள்' என்றேன். அவரும் அவ்வாறே படித்துப்பார்த்துச் 'சரி' என்று உணர்ந்து, அவ்விழாவில் வந்து மலரை வெளியிட்டு 45 நிமிட நேரம் சொற்பொழிவாற்றினார்.

அவரது பெருந்தன்மைக்கு எடுத்துக்காட்டாக ஒன்று கூற விரும்புகிறேன். சனநாயக முறைக்கு நல்ல எதிர்க்கட்சி இன்றியமையாதது என்று கூறிவந்த காங்கிரசுத் தலைவர்கள் 1962–இல் அண்ணாதுரை, காஞ்சிபுரத்தில் தேர்தலில் போட்டியிட்டபோது அவரைத் தோற்கடிக்க என்னென்ன முறைகள் கையாள வேண்டுமோ அவ்வளவும் செய்தனர். ஆனால் அவர் இறந்தபோது அதே காங்கிரசுக்காரர்கள் அனுதாபம் தெரிவித்தனர். அவர் நோயினால் பீடிக்கப்பட்டபோது, அவரது உடல் நலத்திலும் அக்கறை காட்டினர். அதற்குக் காரணம் அண்ணாவிடமிருந்த பெருந்தன்மையேயாகும். அவர் முதலமைச்சர் பதவி ஏற்பதற்கு முன், காங்கிரசுத் தலைவர் ஒவ்வொருவரையும் வீடு தேடிச்சென்று அவர்களது ஒத்துழைப்பையும், நல்லாசியையும் வேண்டிக் கொண்டார்.

அடக்கத்திற்கு உதாரணம் கூற வேண்டுமென்றால்

சென்னையில், மாணவர்களுக்கும் கார்த்தொழிலாளர்களுக்கும் இடையே ஏற்பட்ட சச்சரவில், அண்ணுதுரை நடந்துகொண்ட தன்மையைக் கூறலாம். மருத்துவர்களும் மாணவர்களும் தன்னிடம் மிகுந்த கோபத்தோடு இருக்கின்றனர் என்று தெரிந்துங் கூட அவர்களைப் பார்க்க மருத்துவமனைக்குத் தாஞகவே நேரிற் சென்ருர் மாணவர்கள் அவரை மரியாதையுடன் வரவேற்கத் தவறினுலும், அவர் அதை ஒன்றும் பொருட்படுத்தாது அவர்களிடத்திற் பேசி அவர்களது மனத்தை ஓரளவு மாற்றினுர். தாம் ஒரு முதலமைச்சர். தம்மிடத்து அதிகாரம் இருக்கிறது என்ற ஆணவம் இல்லாமல் அடக்கத்துடன் நடந்துகொண்டார். இத்தகைய நல்ல குணங்கள் தாம் அவருக்குப் பெரிய புகழையும், மரியாதையையும் தேடிக்கொடுத்தன.

நிர்வாகம் நடத்துவதில் முன்னனுபவம் எதுவும் இல்லாத அண்ணுதுரை எப்படி இவ்வளவு திறமையாக நிர்வாகத்தை நடத்தினுர் என்று நினைக்கும்போது, திருஞானசம்பந்தர் எப்படிக் குழந்தையாயிருக்கும்போது திருவருள் துணையால் பாடும் ஆற்றலைப்பெற்ருரோ அதுபோல் இவரும் நிர்வாக ஆற்றலைத் திருவருள் துணையால்தான் பெற்றிருப்பார் என்றே நினைக்கிறேன். தமிழ்ப்பண்பாட்டிற்கே ஓர் எடுத்துக்காட்டாக விளங்கியவர் அண்ணுதுரை! அவர் சடலம் தேசிய மரியாதையுடன் எடுத்துச்சென்றபோது, கூடியிருந்த இலட்சக்கணக்கான மக்களும் அமைதியாகச் சத்தம் இல்லாமல், ஒழுங்காக அதன்பின் ஊர்வலமாகச் சென்றிருந்தால் உலகத்திலேயே ஒருவருக்குமில்லாத பெருமையை அவருக்கு நாம் கொடுத்தவர்களாக இருந்திருப்போம். சேரமான் பெருமாள் நாயனுர், அன்று கைலாயத்திற்குச் சென்ருர் என்று படித்தோம் அதுபோல் அண்ணுதுரை ஆன்மாவும், கைலாயத்திற்குச் செல்வதை நாம் ஒவ்வொருவரும் உறுதியாக உணர்ந்திருப்போம்.

ஆண்டவன் அவரைத் 'தன்னிடம் வா' என்று அழைத்துக்கொண்டான். 'ஆண்டவனுடைய உயர்ந்த படைப்பு மனிதன்' என்று சேக்சுபியர் கூறினுர். அண்ணுதுரை அவர்கள், அத்தகைய படைப்புக்கு ஓர் எடுத்துக்காட்டு என்று நான் கூறுவேன். ஆண்டவன் திருவடிகளையடைந்த அவர் என்றென்றும்

அங்கேயே இருக்கவேண்டுமென்று நாம் வேண்டிக்கொள்வோமாக!

அண்ணாதுரையவர்கள் செய்த சேவைக்கு நினைவாக இத்தமிழ்ச் சங்கத்தில் அவர்களின் திருவுருவப்படமொன்று விரைவில் திறந்து வைக்கப்படும்.

புதிய மந்திரிசபை கருணாநிதி அவர்கள் தலைமையில் ஏற்பட்டிருக்கிறது. அது நல்ல முறையில் சேவை செய்து, அண்ணாதுரை போல நாட்டின் மதிப்பை உயர்த்தவேண்டும்!

இவ்வாறு திரு. பி. டி. இராசன் அவர்கள் உள்ளம் உருக்கும் வகையில் பேசியபின் மேலேகண்ட இரங்கல் தீர்மானத்தைப் படித்தனர். கூட்டத்தினர் அனைவரும் எழுந்துநின்று ஒரு நிமிடம் அமைதியாக ஆண்டவனைத் தியானித்த பின், கூட்டம் கலைந்தது.

அண்ணா இரங்கல் மலர்:

தமிழக முதல்வர் அண்ணாதுரையவர்கள் மறைவு குறித்து 'அண்ணா இரங்கல் மலர்' ஒன்று வெளியிடப்பெற்றுள்ளது. இதில், செந்தமிழ்க் கல்லூரி ஆசிரியர்களும், மாணவர்களும், பாடிய இரங்கற் பாக்கள் அடங்கியுள்ளன.

சங்கத் தலைவர், செயலர் பாராட்டு:

திருவள்ளுவர் கழகத்தார், வள்ளுவர் 2000 ஆண்டுத் தொடக்க விழாவை முன்னிட்டு, நம் சங்கத் தலைவரும், மதுரைத் திருவள்ளுவர் கழகப் பெருமைதரு தலைவருமாகிய தமிழவேள் திரு. பி. டி. இராசன் அவர்கட்கு, ஷை கழகத்தார், 16-1-69 அன்று பாராட்டுச் செய்தனர். ஒய்வுபெற்ற மாவட்ட நடுவர் திரு. பி. அரங்கசாமி நாயுடு அவர்கள் தலைமைதாங்கிக் கழகச் சார்பில் பொன்னாடை போர்த்திச் சிறப்பித்தனர். அண்ணாமலைப் பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் திரு டி. எம். நாராயண சாமிப் பிள்ளை அவர்கள், கழகச் சார்பில் வெங்கடேசர் திருவுருவப் படத்தை அன்பளிப்பாக அளித்தனர். தமிழவேளவர்கட்கு வாழ்த்துப்பாவொன்று படித்துக்கொடுக்கப்பெற்றது விருதுநகர்

திரு. வே. வ. இராமசாமி அவர்கள், தமிழ்ப் பெருமக்கட்குத் தமிழவேளவர்கள் செய்த தொண்டுகளைப் பாராட்டிப் பேசினர். சோழவந்தான் திரு. சுப்பிரமணிய முதலியார், திரு மு. கந்தசாமி ஆகியோரும் பாராட்டுரை பகர்ந்தனர்.

மறுநாள் 17-1-69 அன்று, ஷை கழகத்தார், நம் சங்கச் செயலரும், கழகப் புரவலருமாகிய திரு. வ. பழநியப்ப பிள்ளை அவர்களின் 60-ஆம் ஆண்டு மணிவிழாவை மிகச் சிறப்புறக் கொண்டாடினர். மதுரைப் பல்கலைக்கழகத் துணை வேந்தர் திரு. தெ. பொ. மீனாட்சிசுந்தரனாரவர்கள் தலைமை தாங்கினர். தவத்திரு. குன்றக்குடி அடிகளார், கழகச் சார்பில் திரு. வ. ப. அவர்கட்குப் பொற்பதக்கத்திற்பொறிக்கப்பட்ட 'அறநெறியண்ணல்' என்னும் பட்டத்தையளித்துப் பொன்னாடையும் போர்த்திச் சிறப்பித்தனர். திருக்குறள் ச. வெள்ளைச்சாமி நாடார் அவர்கள், 'குறள்மணிகள் அறுநூறு' என்னும் மணிவிழா மலரை வெளியிட்டுப் பேசினர். திரு. லெ. நாராயணன் செட்டியார் அவர்கள், திரு. வ. ப. அவர்களின் தொண்டுகளை விரிவாகப் பேசினர்.

சங்கப் புலவர் தேர்வுகள்:

முன்னர் அறிவித்தவாறு சங்க நுழைவு, இளம்புலவர், புலவர் தேர்வுகள், 13-3-69 முதல் 19-3-69 முடிய, மதுரை, மார்த்தாண்டம், திருப்பனந்தாள், மோகனூர் முதலான இடங்களில் நடைபெற்றன. இவ்வாண்டு நுழைவுத் தேர்வில் 239 பேரும், இளம்புலவர் தேர்வில் 660 பேரும், புலவர் தேர்வில் 127 பேரும் ஆக 1026 பேர் சங்கத் தனித் தமிழ்த் தேர்வுகள் எழுதியுள்ளனர்.

சங்கப் புரவலர்

தமிழக ஆளுநர் மாண்புமிகு சர்தார். உச்சல் சிங் அவர்கள் சங்கத்தின் புரவலராக (Patron) ஆகியுள்ளனர் என்பதை மிக்க மகிழ்வுடன் தெரிவித்துக் கொள்கின்றோம்.

மதிப்புரை

பூம்புகார் ஆற்றுப்படை:

(ஆசிரியர்: கவிஞர் பெரி. இலக்குமணச் செட்டியார்-
விலை. ரூ. 1-50. பக்கம்: 75. கிடைக்குமிடம்: ஆசிரியர்,
வேகுப்பட்டி அஞ்சல், திருச்சி மாவட்டம்)

'பூம்புகார் ஆற்றுப்படை' என்னும் இந்நூல், இனிய, எளிய செய்யுள் நூல். விநாயகர் துதி முதலாகவுள்ள பாடல்கள் 21 நீங்கலாக, 836 அடிகளைக் கொண்டது இது. இந்நூலாசிரியர், பெரி. இலக்குமணச் செட்டியார் என்பார், பழந்தமிழ் நூல்களில் பயிற்சிமிக்குடைய பெருங்கவிஞர். நாற்பது ஆண்டுகளாகக் கவிதை புனையும் கவிவாணர். தையனாயகி அம்மன் பதிகங்கள் முதலான இருபத்தைந்து நூல்களை இயற்றிய பேராசிரியர்.

காவிரிப்பூம்பட்டினம் எனப் போற்றப் பெறும் 'பூம்புகார்' பண்டைச் சோழர்களின் தலைநகராய் இலங்கியது. சேர நாட்டுச் செம்மல் இளங்கோவடிகளின் இன்றமிழ் நாவால் பாராட்டப் பெற்ற பெருஞ்சிறப்புடையது. ஆனால் இன்றோ, இருக்குமிடந் தெரியாமல், முந்நீர்ப் புகுந்து முயன்று வருந்திப் பன்னூறாண்டுகளாகத் தவம் பயில்கின்ற பான்மைத்தாய்க் காட்சியளிக்கின்றது. இவ்விழி நிலை கண்டு ஏங்குகின்றார் இக் கவிவாணர். அவ் ஏக்கத்தின் விளைவால் எழுந்ததே 'பூம்புகார் ஆற்றுப்படை'. கவிஞர் கண்முன், "பூவிரி வைகை பொருநை நதியோடு, காவிரி பாயுங் கவின் தமிழ் நாடும், மாபெரும் சோழ மண்டலப்பகுதியும், பழமைப் பூம்புகாரும்" காட்சியளிக்கின்றன. புகார் நகரத்தே அமைந்த மாட மாளிகைகள், கூட கோபுரங்கள் மருவூர்ப் பட்டினப் பாக்கங்கள், அரசவை அணிகள், மாடநீண் மனைகள், ஆடல் மணக்கும் அரங்குகள், பாடல் மணக்கும் பதிகள் அறநெறிச் சாலைகள், ஆயுதச் சாலைகள், கல்விச் சாலைகள், காவலர்

நிலைகள், ஐவகை மன்றங்கள், கலங்கரை விளக்கம், கங்குல் அங்காடிகள் ஆகியன ஒன்றன்பின் ஒன்றாய் நினைவில் எழுகின்றன. அந்நகரத்தே ஆட்சி புரிந்த சோழப் பேரரசரும், கற்புக்கரசி கண்ணகி தேவியும், முற்றுந் துறந்த சுவட்டினத்தடிகளும், பெருந்தன வணிகர்களும் ஏற்றமுற்ற தோற்றம் நெஞ்சில் நிற்கின்றது. "இத்தகைச் சிறப்பின் இயல்பொடும், எழிலொடும், முத்தமிழ் மொழியின் முழக்கொடும் முன்னாள் அருள்வளன், அணிவளன் அகவளன், புறவளன், பொருள்வளன் கொழித்த இ பூம்புகார் நகரம் இற்றைநாட் பொலிவிழந் தியல்பெலாங்குன்றிச், சுற்றிய சூழ்வினைத் தொடர்பால் நலிவற், றின்னல் எய்தி எழிலெலாம் மறைந்துளம், உன்னிக் கவலுறும் ஒரு சிற்றூராய்" காட்சியளிக்கும் நிலை கண்டு நெஞ்சம் உருகுகின்றார். எனவே, 'பண்ணிசை தெரிந்து இன்னிசை பாடும், ஏழிசை மருவிய யாழிசைச் செல்வனைப், பார்த்துப் பேசுகின்றார்:—

"மாந்தர் மகளிர் வானவர் தானவர்
வேந்தர் விஞ்சையர் விழைவுறு பொருந!
ஒருமையும் உரிமையும் உணர்ந்துகோ லோச்சும்
அருமையார் தமிழக அரசவை சென்றுநீ
பாவிற் புகழ்ந்து பாடியும் ஆடியும்
ஆவன செய்வான் அன்புரை கூறியும்...!!

புகாரின் எளிமைக் காட்சியை அகற்றி, மாண்புறும் பழமை வளம் பெறு நகராய்த் தோற்றுவித்திடவும், அழகிய தமிழ்க் கொடி ஏற்றுவித்திடவும், தூண்டுதல் செய்வாயாக! உனக்கும் பல்வகை உதவிகள் புரிந்து மனக்குறை தீர வழங்குவர் பரிசில்" என்று ஆற்றுப்படுத்துகின்றார் கவிஞர் அதனால் இந்நூல் 'பூம்புகார் ஆற்றுப்படை' எனும் பெயர் பெறுவதாயிற்று. சொல்வளம், பொருள்வளம், கவிதை வளம் முதலான பல்வகை நலங்களும் இந்நூலை அணி செய்கின்றன. உரைவேந்தர் ஔவை துரைசாமி பிள்ளையவர்களின் முன்னுரை யொன்றே இந்நூலின் பெருமையை விளக்கப் போதிய சான்று! கவிஞர். இலக்குமணச் செட்டியாரவர்கள் இதுபோன்றகாவியங்களை நந்தமிழன்னைக்குச் சூட்டிநம்மையும் மகிழ்வுறுத்தவேண்டும் என்பது எம்ஆவல்.

—புலவர் ச. சாம்பசிவன்

குறள்மணிகள் அறுநூறு:

(அறநெறியண்ணல் கி. பழநியப்பனாரவர்கள் மணிவிழா மலர்—தெளிவுரை:—பண்டித வித்துவான் ச. சாம்பசிவன், பக். 150 விலை: 50 காசு. வெளியீடு: மதுரைத் திருவள்ளுவர் கழகம், வடக்காடி வீதி, மதுரை-1.)

மதுரைத் திருவள்ளுவர் கழகத்தைத் தோற்றுவித்து, அதன் வளர்ச்சிக்கு இன்றுவரை பல்லாற்றானும் உறுதுணைபுரிந்தவர் திரு கி. பழநியப்பனாராவர். அன்னாரின் 60-ஆம் ஆண்டு மணிவிழாவை இக்கழகத்தார் சிறப்புறக் கொண்டாடி 'அறநெறியண்ணல்' என்னும் பட்டமளித்ததோடு, 'குறள் மணிகள் அறுநூறு' என்னும் இந்நூலையும் வெளியிட்டுள்ளமை போற்றற்குரியது.

இந்நூலின் முதல் 14 பக்கங்களில், கி பழநியப்பனாரவர்களின் வாழ்க்கை வரலாறு, அழகிய முறையில் தரப்பட்டுள்ளது. ஆயிரத்து முந்நூற்றுருப்பது அருங்குறட்பாக்களில், மாணவர்களும் மற்றவர்களும் அன்றாட வாழ்வில் கைக்கொள்ளத்தக்க வகையில் அறுநூறு குறட்பாக்களைப் பொறுக்கியெடுத்து, இனிய எளிய தெளிவுரையும் தந்துள்ளார் புலவர் ச. சாம்பசிவனார். இவ்வுரை நூலில், சுருங்கச் சொல்லி விளங்கவைக்கும் தனிப் பேரழகு அமைந்துள்ளது.

"எல்லா விளக்கும் விளக்கல்ல சான்றோர்க்குப்
பொய்யா விளக்கே விளக்கு"

என்னுங் குறளுக்கு, இவ்வுரையாசிரியர், "துறவற ஒழுக்கத்தில் உயர்ந்த சான்றோர்க்கு, வெளியே உள்ள இருளை நீக்கும் ஞாயிறு, திங்கள், தீ எனப்பட்ட விளக்குகள் எல்லாம் விளக்கு ஆகா! மனத்தில் உள்ள அறியாமை என்ற இருளைப் போக்கும் பொய் சொல்லாமை ஆகிய விளக்கே உயர்ந்த விளக்காம்!" எனச் சுருங்கிய சொற்களால், தெளிந்த உரை தருவது போற்றத்தக்கது. இதுபோன்றே எல்லாக் குறள்களுக்கும் தெளிவுரை தந்துள்ளார். புலவர் சாம்பசிவனார், திருக்குறள் நூல் முழுமைக்குமே இத்

தகைய தெளிவுரை எழுதி, நூல் வடிவில் தரவேண்டும் என்பது எம் ஆவல்.

'குறள் மணிகள் **அறுநூறு**' என்னும் இந்நூல், ஒவ்வொரு தமிழன் கையிலும் இருக்கவேண்டிய நூல். சிறப்பாக மாணவர் அனைவரும் வாங்கிப் பயன்பெற வேண்டிய நூல். இதன் விலையும் மிகமிகக் குறைவு. இந்நூலை வாங்குவதன் வாயிலாக மதுரைத் திருவள்ளுவர் கழகப் பணிகளுக்கு உதவி செய்ததாகவும் அமையும். தெளிவுரையாசிரியர்க்கும் இதனை வெளியிட்ட திருவள்ளுவர் கழகத்தார்க்கும் எம் பாராட்டு.

க. சண்முகசுந்தரம்.

—※—